# இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

# வருடாந்த அறிக்கை




# 2014

# பொருளடக்கம்


| | பொருளடக்கம் | |
|---|---|---|
| 1 | தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 3 |
| 2 | **பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் -2014** | **4** |
| 3 | **தலைவரது மீளாய்வு** | **5** |
| 4 | **சபை பற்றிய தகவல்கள்** | **6** |
| 5 | **ஒட்டுமொத்த செயலாற்றுகை – 2014** | **7** |
| **6** | **நிதிக் கூற்றுக்கள்** | **15** |
| **7** | **கணக்காய்வு & முகாமைத்துவக் குழு அறிக்கை** | **41** |
| 8 | **கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை** | **42** |


(முன்பு (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

# வருடாந்த அறிக்கை - 2014

## தொலைநோக்கு

விவசாய சமூகத்தினரினதும் குறைந்த வசதிகளுடைய மக்களினதும் கௌரவத்தை மீள உருவாக்கும் நோக்கில் நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதன்மூலம் பொருளாதார சுயாதீனத்தையும் சுய நம்பிக்கையையும் உருவாக்குதல்.

## செயற்பணி

பயனாளிகளின் பொருளாதார சுயாதீனத்தை ஏற்படுத்தும் பொருட்டும், பிறரில் சார்ந்திருக்கும் கலாசாரத்திலிருந்து விடுவிக்கும் பொருட்டும் விவசாய, கால்நடை மற்றும் ஏனைய துறைகளின் திறன் அபிவிருத்தி பொருட்டும் பங்குகொள்ளும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துதல்.

**2014 ஆம் ஆண்டின் பணிப்பாளர் சபை**

| பெயர் | பதவி | சேவை நிலையம் |
|---|---|---|
| திருமதி.குமுதினி குணசேகர | தலைவி | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை |
| திரு.பி. ஹெட்டியாரச்சி | உப தலைவர் | இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை |
| திரு.எஸ்.சுரவீர | சிரேட்ட உதவி செயலாளர் (நிருவாகம்) | நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு |
| திரு.கே.ரணசிங்க | சிரேட்ட உதவி செயலாளர் (நிருவாகம்) | அரசாங்க நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சு |
| திருமதி.டி.என். ஹெட்டியாரச்சி | சிரேட்ட உதவி செயலாளர் (நிருவாகம்) | கமத்தொழில் அமைச்சு |
| திருமதி.ஆர்.எதிரிசிங்க | பணிப்பாளர் (திட்டமிடல்) | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு |
| திரு.டபி.எச்.ஜீ.கோசல | உதவி பணிப்பாளர் | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் |
| திரு.ஜீ.ஜீ.பந்துல | பணிப்பாளர் சபை உறுப்பினர் | சாந்தனி, கின்விகுனே, மெதமுலன. |
| திரு.எஸ்.அபேசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | சக்தி, மேல் நீதிமன்றம் அருகில், கல்தொல, கொடபொல. |
| திரு.ரஸ்மி ஜயசிங்க | பணிப்பாளர் சபை உறுப்பினர் | 10,மகாவெல வீதி, திக்வெல்ல. |

# தலைவரது மீளாய்வு

தேசிய உணவு ஊக்குவிப்புச் சபையின் தலைவராக 04 வருடங்கள் முனைப்பான சேவையாற்றி 2014ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கை பொருட்டு நுண்ணாய்வுமிக்க செயலாற்றுகையை சமர்ப்பிப்பதற்கு இயலுமாக இருந்தமை நான் பெற்ற பாக்கியமாகும்.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு அடிப்படையிலும் உருவாக்கிய சட்டத்தில் அடங்கிய குறிக்கோள்களுக்கு ஏற்றவாறும் எமது சபை 2014ஆம் ஆண்டில் பின்வரும் செயற்றிட்டங்கள்மூலம் இலங்கையின் விவசாயிகளுக்கும் அதே போன்று நகர, கிராமிய மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு கைகொடுப்பதற்கு முடியுமாக இருந்தது. இங்கு அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் எண்ணக்கருவின்படி எமது கமத்தொழில் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்களது வழிகாட்டுதல்கள் மெச்சத்தக்கன.

1. பிரயோக வேலையரங்குள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அடங்கிய தேசிய உணவு ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள்.
2. சுவபோஷ போசாக்கு பெக்கற் தயாரிப்பும் மேம்பாடும்.
3. பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா மற்றும் தோசைக் கலவை மேம்பாடு.
4. உள்ளூர் பாரம்பரிய அரிசி உற்பத்தி மற்றும் நுகர்வு மேம்பாடு.
5. நஞ்சற்ற எமது உணவு - சுவந்தல் ஸ்லோ உணவு.
6. நிறை குறைந்த கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்குப் பொதி நிகழ்ச்சித்திட்டம்.
7. விவசாயி உற்பத்தி விற்பனை நிலையங்கள்.
8. புத்தல, தணமல்வில மற்றும் அம்பலாந்தோட்டை பண்ணை விருத்தி செயற்றிட்டம்.

மேற்குறிப்பிட்ட செயற்றிட்டங்களுக்கு மேலதிகமாக, தற்கால சமூகத்தின் தேவைகளுக்கு ஏற்றவகையில் முன்னைய செயற்றிட்டங்கள் விருத்தி செய்யப்பட்டன. விசேடமாக, தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி விவசாயி உற்பத்தி விற்பனைக்கூடங்கள் மூலம் கிராமிய விவசாயிகள் தங்களது உற்பத்திகள் பொருட்டு பிரதான பிரச்சினையான சந்தைவசதியை தேடிக்கொடுத்தல் அத்துடன் உற்பத்திகளுக்கு நியாயமான விலையை பெற்றுக்கொள்ளல் என்பன பொருட்டு நிரந்தர தீர்வு வழங்குவதற்கு முடியுமாக இருந்ததுடன், நகர மக்கள் தரத்தில் சிறந்த, நியாயமான விலையில் புதிய பொருள்களை வாங்குவதற்கு முடியுமாக இருந்தமையும் இதன்மூலம் வழி கோலின.

மேலும், தெகிவளை மற்றும் நாரஹேன்பிட்டி நகர பிரதேசங்களில் நாற்று மேடைகளை உருவாக்குவதன்மூலம் நகரவாசிகள் குறைந்த இடவசதியினுள் அதிக விளைவை தருகின்ற பயிர் மற்றும் பழக் கன்று வகைகளை கொள்வனவுசெய்யும், செய்கைகளை மேற்கொள்வதற்கு தேவையான அறிவுரை வழங்கும் சேவைகளும் நிறைவேற்றப்படுகின்றன.

.

கலன்குட்டிய மற்றும் கன்னோறுவையில் அமைந்துள்ள எமது உற்பத்திசாலைகள் மூலம் நஞ்சு தன்மையற்ற உள்ளூர் அரிசி மா, தோசை மா, விசேட அரிசி மா, மவ்போஷ, சுவபோஷ, சிசுபோஷ போன்ற தயாரிப்புகளை சந்தைக்கு வழங்கக்கூடியதாக உள்ளது. இதன்மூலம் இலங்கை மக்களின் போசனையை மேம்படுத்துவதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது.

உள்ளூர் பாரம்பரிய நெல் வகைகளை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்துவதன்மூலம் விளைச்சல் அதிகரித்ததுடன் இலாபகரமானதாகையினால் தனியார் துறைக்கும் அறிமுகப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. மேலும், இதற்கு சந்தை வாய்ப்பும் கிடைத்துள்ளதுடன் ரூ.80-90 வரையான உயர் விலையை பெற முடியும்.

மேலும், 2014ஆம் ஆண்டில் தேசிய கண்காட்சிகளில் முனைப்பான பங்களிப்பை நிறுவனம் வழங்கியது. குறிப்பாக, குருநாகல் குளியாபிட்டியவில் நடைபெற்ற ‘‘தேசத்தின் மகுடம்’’, வாரியபொலவில் நடைபெற்ற ‘‘தேசிய விவசாயிகள் வாரம்’’, பண்டாரநாயக்க சருவதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ‘‘ஹெல்த் கெயா’’, ‘‘புரோ புட் புரோ பெக் சருவதேச கண்காட்சி’’, பொதுநலவாய அரச தலைவர்கள் கண்காட்சி மற்றும் ‘‘ஷில்ப -2014’’ என்பனவற்றில் எமது நிறுவனம் பங்குபற்றியது.

பதவியினர்களை ஊக்கப்படுத்தி அவர்களின் செயலாற்றுகையை மேம்படுத்தும் முகமாக 2014ஆம் ஆண்டினுள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், தமிழ் புது வருட கொண்டாட்டங்கள், பிரித் மறையுரை போன்ற சமய சடங்குகள் ஆகியன ஒழுங்குசெய்யப்பட்டதுடன் பதவியுயர்களும் வழங்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, 25/2014 சுற்றறிக்கைக்கு இணங்க நிறுவனத்தில் சேவையாற்றிய 52 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டனர்.

**குமுதினி குணசேகர**
**தலைவி,**
இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

**சபை பற்றிய தகவல்கள்**
சபையின் பெயர்
தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை (முன்பு (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை)

**சட்ட உருவரைச்சட்டகம் மற்றும் அமைவிடம்**

1973ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க (இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு சட்டத்தின்மூலம் தாபிக்கப்பட்டது. 2009ஆம் ஆண்டில் தேசிய உணவு ஊக்குவிப்புச் சபை என பெயர் மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. பிரதான அலுவலகம் இல.45, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 5 இல் அமைந்துள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் குறிக்கோள்களும்**
பிரதானமாக பொருளாதாரரீதியாக பாதிப்புற்ற மக்களுக்கு சேவையாற்றும் நிறுவனம். அதன் குறிக்கோள்களாவன:

- அரசாங்கத்தினால் தயாரிக்கப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க சமூக, பொருளாதார அபிவிருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு அரச சார்பற்ற முகவராண்மைகளின் நன்கொடைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பொது வசதிகள், சமூக நலனோம்பல், பொருளாதார அபிவிருத்தித்திட்டங்களை செயற்படுத்துகையில் நிறுவனங்களுக்கும் பிற சபைகளுக்கும் உதவுதல்.
- விவசாய,கைத்தொழில் அபிவிருத்திபால் ஈடுபடுத்தப்பட்ட குறித்துரைத்த செயற்றிட்டங்களுக்கு நன்கொடை வழங்குதலும் மேம்படுத்தலும், ஒருங்கிணைப்பு செய்தலும்.
- விவசாய, கைத்தொழில் உற்பத்திகளை அதிகரிப்பதற்காக செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அரச சார்பற்ற முகவராண்மைகளை மதிப்பீடு செய்தல்.
- சருவதேச பட்டினி ஒழிப்பு இயக்கம் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் ஒத்துழைத்தல்

**வரிசை அமைச்சு**
கமத்தொழில் அமைச்சு

**அலுவலகம்**
இல.45, கிரிமண்டல மாவத்தை, கொழும்பு 5.

தொலைபேசி : 0112506895
தொலைநகல் : 0112506907
மின்னஞ்சல் : ffhc.srilanka@gmail.com

**கணக்காய்வாளர்**
கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம்

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி – பொரளை
மக்கள் வங்கி – தெகிவளை

**தந்திரோபாயங்கள்**

- அபிவிருத்தி முன்னெடுப்புக்களை ஒரு பொது குறிக்கோள்பால் ஒன்றிணைத்தல்.
- பொருளாதார வளர்ச்சி, சமூக, கலாசார அபிவிருத்திகளில் பங்குபற்றுவதற்காக கிராமிய மக்களுக்கு வாய்ப்பு வழங்குதல்.
- அபிவிருத்தி செயன்முறையில் முழுமையாக பங்குபற்றும் பொருட்டு கிராமிய மக்களை வலுவூட்டுதல்.
- சுயமாக முன்னோக்கிச் செல்லும் நீடித்த அபிவிருத்தியை ஏற்படுத்தும் பொருட்டு சாதனை நோக்கிய விழுமியங்களுடனான சுய நம்பிக்கைக்கும் இயலுமைக்கும் பாரம்பரிய கிராமிய மக்களை மாற்றுதல்.
- உள்நாட்டு உணவு உற்பத்தியையும் பாவனையையும் ஊக்குவித்தல்.
- அறுவடைக்குப் பிந்திய சேதத்தை குறைக்கும் தொழினுட்பத்தை அடி மட்டத்திற்கு கொணடுசெல்லல்.

# ஒட்டுமொத்த செயலாற்றுகை – 2014

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையானது, 2014ஆம் ஆண்டில் 12 செயற்றிட்டங்களை மேற்கொண்டுள்ளதுடன் இச்செயற்றிட்டங்களின் சுருக்கமான விபரங்கள் கீரே தரப்பட்டுள்ளன.

1. **சுவபோஷ போசாக்கான உணவை அறிமுகப்படுத்தும் செயற்றிட்டம்**
   சுவபோஷ தானிய உணவு உற்பத்திச் தொழிற்சாலை கன்னோறுவ உணவு ஆராய்ச்சி அலகில் அமைந்துள்ளது. இவ்வாண்டினுள் சுவபோஷ 200 கிராம் 157,466 பெக்கற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன், செலவினம் ரூ. 7.16 மில். ஆவதுடன் வருமானம் ரூ.8.49 மில். ஆகும்.

2. **நிறைகுறைந்த கர்ப்பிணி தாய்மார்களுக்கு மவ்போஷ போசாக்கான உணவு**
   மவ்போஷ உற்பத்திச் தொழிற்சாலை கன்னோறுவ உணவு ஆராய்ச்சி அலகில் அமைந்துள்ளது. இவ்வாண்டினுள் சுவபோஷ 1 கிலோ கிராம் 78,733 பெக்கற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன், அதற்கான செலவினம் ரூ.15.34 மில். ஆவதுடன் வருமானம் ரூ.19.2 மில். ஆகும்.

3. **பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டம்**
   இச்செயற்றிட்டத்தின் கீழ் விசேட அரிசி மா கலவை மற்றும் விசேட தோசை மா கலவை என்பன எமது சபையினால் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இந்த உற்பத்திகள் கலன்குட்டி தொழிற்சாலையினுள் உற்பத்திசெய்யப்படுவதுடன், விசேட அரிசி மா கலவை மற்றும் விசேட தோசை மா கலவை 157,466 பெக்கற்றுக்கள் தயாரிக்கப்பட்டதுடன் அதற்கான செலவினம் ரூ. 12.8 மில். ஆவதுடன் வருமானம் ரூ.14.37மில். ஆகும்.

4. **சிசுபோஷ தானிய உணவு செயற்றிட்டத்தை அறிமுகப்படுத்தல்**
   இது, வடமத்திய மாகாண பாடசாலை மாணவர்களின் போசாக்கு மட்டத்தை மேம்படுத்தும் முகமாக நடைமுறைப்படுத்துவதற்குள்ள புதிய செயற்றிட்டமொன்றாகும்.

5. **புத்தல பண்ணை விருத்தி (10 ஏக்கர்)**
   2014ஆம் ஆண்டின் முதல் 6 மாதத்தினுள் நிறுவனத்தின் செலவில் சிறிய அளவில் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகஸ்ட் மாதம் முதல் அமைச்சிலிருந்து நிதி கிடைக்கப்பெற்றமையினால் செயல் திட்டத்துக்கிணங்க செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. பண்ணைக்குச் சொந்தமான இரண்டு விவசாயக் கிணறுகளை ஆழப்படுத்தி பழுதுபார்ப்பதற்காக ரூ.0.4739மில். செலவு உறப்பட்டுள்ளது.

   பண்ணையைச் சுற்றி யானைக்கான மின்சார வேலி ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன், அதற்கு ரூ.1.0173மில். செலவு உறப்பட்டுள்ளது. பண்ணை உபகரண பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு பொருட்டு ரூ.0.1870மில். செலவு உறப்பட்டுள்ளது.

   சோளம் 3.5 ஏக்கரில் இங்கு செய்கை பண்ணப்பட்டிருப்பதுடன் அதற்கு ரூ.0.0356மில். செலவு உறப்பட்டுள்ளது. ஏப்றல் மாத ஆரம்பத்தில் அதன் அறுவடையைப் பெறலாம்.

   மரக்கறி செய்கை பொருட்டு ரூ.0.0578மில். செலவு உறப்பட்டுள்ளதுடன் அதன் முதலாவது வருமானமாக ரூ.0.01654மில். கிடைக்கப்பெற்றுள்ளது. மீண்டும் பலதடவைகள் அறுவடை செய்யலாம்.

   நிரந்தர பயிர்களாக மா, தோடம்பழம், வாழை மற்றும் தெங்கு செய்கை இடம்பெறுவதுடன் அவற்றை பராமரிப்பதற்காக ரூ.0.1241மில். செலவு உறப்பட்டுள்ளது. அவை இன்னும் பலன்கொடுக்காத பருவத்தில் உள்ளமையினால் அவற்றிலிருந்து வருமானம் பெறமுடியாது.

இந்த பண்ணையில் 03 நிரந்தர ஊழியர்கள் இருப்பதுடன் காவலாளர் நாளாந்த சம்பளம் அடிப்படையில் சேவையாற்றுகின்றார். பண்ணையின் தேவைப்பாட்டிற்கிணங்க, நாளாந்த சம்பளம் அடிப்படையில் தொழிலாளர்கள் மேலும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். கடந்த ஆண்டின் ஆகஸ்ட் மாதம் முதல் திசெம்பர் வரையில் ரூ.1.9443மில். செலவு உறப்பட்டுள்ளது.

**6. தணமல்வில பண்ணை விருத்தி (16 ஏக்கர்)**

2014ஆம் ஆண்டின் முதல் 6 மாதத்தினுள் நிறுவனத்தின் செலவில் சிறிய அளவில் செய்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. ஆகஸ்ட் மாதம் முதல் அமைச்சிலிருந்து நிதி கிடைக்கப்பெற்றமையினால் செயல் திட்டத்துக்கிணங்க செய்கை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. நெற் செய்கைக்கு 8 ஏக்கர் ஒதுக்க முடிந்தபோதிலும் குளத்தில் தண்ணீர் போதியதாக இல்லாமையினால் இம்முறை 4.5 ஏக்கர் செய்கை பண்ணப்பட்டது. சுவந்தல் நெல் வர்க்கம் செய்கை பண்ணப்பட்டிருப்பதுடன் ரூ.0.14 மில். தொகை செலவிடப்பட்டுள்ளது.

முருங்கை 100 கன்றுகள் நடப்பட்டிருப்பதுடன் ரூ.0.012 மில். தொகை செலவிடப்பட்டுள்ளது. இக்கன்றுகளின் வயது 2 மாதங்களாகும். இங்கு சிறு முருங்கை வர்க்கம் பயிரிடப்பட்டுள்ளது.

சோளம் 1 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்டிருப்பதுடன் CIC நிறுவனத்திலிருந்து விதைகள் பெறப்பட்டுள்ளது. இந்நோக்கத்துக்காக ரூ.0.005 மில். தொகை செலவிடப்பட்டுள்ளது. மார்ச் மாத முதல் வாரத்தில் அதன் அறுவடையைப் பெறலாம். பூசணிக்காய் மற்றும் பயிற்றங்காய் 0.25 ஏக்கர்வீதம் செய்கை பண்ணப்பட்டுள்ளது. இதற்காக ரூ.0.002 மில். செலவு உறப்பட்டுள்ளது. வட்டுக்கத்தரி நாற்று மேடை இடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, 100 மா கன்றுகள் நடப்பட்டுள்ளன.

இயந்திர திருத்தத்தின் கீழ் 5040 திராக்டர் முழுமையாக பழுதுபார்க்கப்பட்டுள்ளது. இதற்காக ரூ.0.2209 மில். தொகை செலவிடப்பட்டுள்ளது.

விவசாயக் கிணறு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதுடன் அதற்கு ரூ.0.5426 மில். தொகை செலவிடப்பட்டது.

பண்ணையினுள் கட்டடமொன்று பழுதுபார்க்கப்பட்டிருப்பதுடன் அதற்கு ரூ.0.4687 மில். தொகை செலவிடப்பட்டுள்ளது.

**7. விவசாயிகள் வாரம்**

அமைச்சர்கள் உள்ளிட்ட விசேட அதிதிகளுக்கு உண்பதற்கு குடிப்பதற்கு கொடுக்கப்பட்டதுடன் எமது நிறுவனத்தின் தயாரிப்புக்களை விற்பதற்காக விற்பனைக் கூடமொன்றும் நடாத்தப்பட்டது. இந்நோக்கத்துக்காக அமைச்சிலிருந்து ரூ.0.8 மில். கிடைத்திருந்ததுடன் செலவினம் ரூ.1.06 மில். ஆகும்.

**8. தேசத்தின் மகுடம் 2014 – குளியாப்பிட்டி**

இங்கு மாதிரி நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டதுடன் அதற்காக ரூ.0.1 மில். மொத்தச் செலவு உறப்பட்டது.

**9. நாற்று மேடை – நாரஹேன்பிட்டி**

நகர வதிவாளர்களுக்குத் தேவையான எல்லா வீட்டுத்தோட்ட கன்றுகள், பசளை, விவசாய இரசாயனங்கள், கருவிகள் போன்றன இங்கு வழங்கப்படுகின்றன. இந்த வருடத்தின் செலவினம் ரூ. 6.102மில். ஆக இருந்ததுடன் வருமானம் ரூ.6.128மில். ஆக இருந்தது.

**10. விவசாயி உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை**

இங்கு 18 ஊழியர்கள் சேவையாற்றுவதுடன் ரூ.45.144மில். வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. அத்துடன், செலவினம் ரூ. 42.87 மில். ஆக இருந்தது.

**11. ஹெல்தி புட் உணவகம் - நாரஹேன்பிட்டி**

இங்கு 14 ஊழியர்கள் சேவையாற்றுவதுடன் செலவினம் ரூ. 18.09 மில். ஆவதுடன் வருமானம் ரூ.16.4மில். ஆகும். இந்த உணவகம் மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளதுடன் செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**12. தேசிய உணவுகளை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் (மாவட்ட மற்றும் பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்கள்)**

இந்த நிகழ்ச்சித்திட்ட தொடர் நாடு முழுவதும் 05 மாவட்டங்களை உள்ளடக்கியவாறு நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்ட தொடர்மூலம் தேசிய உணவுகளை நாட்டினுள் பிரபல்யப்படுத்துவதன்மூலம் மந்தபோசணை மற்றும் செயற்கை உணவுப் பாவனையை குறைத்தல், உள்ளூர் விவசாயத்துறையை ஊக்குவித்தல், தேசிய உணவுகளில் உள்ள ஆரோக்கியம் மற்றும் தரம் பற்றி இல்லத்தரசிகளை விழிப்பூட்டுதல், தொற்றாத நோய்களை கட்டுப்படுத்துவதற்குத் தேவையான பின்னணியை புரிந்துணரச் செய்தல், வீட்டுத்தோட்ட செய்கைக்கு பெண்களை தூண்டுதல் மற்றும் சுயதொழில் பொருட்டு பெண்களுக்குத் தேவையான அடிப்படை தேவைப்பாடுகளை வழங்கி அதற்கு அவர்களை ஈடுபடுத்துதல் என்பன பிரதான குறிக்கோள்களாக மேற்கொள்ளப்பட்டன.

இங்கு செயற்பாடுகளாக பங்குபற்றுவோருக்கு சுவபோஷ மற்றும் அரிசி மா பெக்கற் பகிர்ந்தளித்தல், தேசிய உணவு பானங்களை பிரயோகரீதியில் தயாரித்தல், சாப்பாடு வகைகள் அடங்கிய சிறு புத்தகங்களை தயாரித்தல், போக்குவரத்து, ஒழுங்குபடுத்துநர்களின் உணவு பான மற்றும் தங்குமிட வசதிகள், வெளி விரிவுரையாளர்கள் விரிவுரை நடாத்துதல் மற்றும் உதவியாளர்களின் கொடுப்பனவு போன்றன உள்ளடங்குகின்றன. 2014ஆம் ஆண்டில் உறப்பட்டுள்ள மொத்தச் செலவினம் ரூ. 5.23 மில். ஆவதுடன் பயனாளிகளின் எண்ணிக்கை 20,750 ஆகும். இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்தறை, அம்பாந்தோட்டை, கிளிநொச்சி, பொலன்னறுவை, கொழும்பு ஆகிய மாவட்டங்களினுள், 34 மாவட்ட நிகழ்ச்சித்திட்டங்களாகவும் 105 பிராந்திய நிகழ்ச்சித்திட்டங்களாகவும் நடாத்தப்பட்டன.

**13. திறைசேரி நிதியேற்பாடுகள்**

| | வரவுசெலவுத்திட்ட நிதியேற்பாடு 2014 (ரூ.மில்.) | பெற்ற மானியம் (ரூ.மில்.) | உண்மையான செலவினம் (ரூ.மில்.) | மிகை செலவினம் (ரூ.மில்.) |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் செலவு | 15.00 | 16.50 | 19.10 | 2.60 |
| மூலதனச்செலவு | 5.00 | 5.00 | 5.23 | 0.23 |
| மொத்தம் | 20.00 | 21.50 | 24.33 | 2.83 |

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் அங்கத்தவர்களின் பொறுப்புடைமைக் கூற்று

பக்கம் 01, 02இலுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்கங்கள் 08 முதல் 26 வரையிலான குறிப்புக்கள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒன்றிணைந்த பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயாரித்து சமர்ப்பிக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சார்ந்ததாகும். இந்த நிதிக் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்படுகின்றது.

| **பணிப்பாளர்கள்** | **கையொப்பம்** |
| --- | --- |
| 1. | |
| 2. | |

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

இந்த நிதி நிலமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றுகைக்கூற்று என்பன பொதுவாக

ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருப்பதுடன் இலங்கை அரச சேவையின் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வரலாற்றுக் கிரய எண்ணக்கரு அடிப்படையிலும் தொடர்ந்து செல்லும் எண்ணக்கரு அடிப்படையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன.

**கணக்கீட்டுக் கொள்கைகள் :**

1. சொத்துக்களின் புதிய கொள்வனவானது, கொள்வனவுசெய்யப்பட்ட பெறுமதியிலும் (கிரயத்தில்) ஏனைய சொத்துக்கள் மறுபடி விலைமதித்தல் பெறுமதியிலும் (சாதாரண பெறுமானத்தில்) காட்டப்பட்டுள்ளன.

மறுபடி விலைமதிக்கப்பட்ட சொத்துக்கள், அவற்றின் பயன்பாட்டு ஆயுட்காலம் முழுவதும் தேய்மானம் இடப்படுவதுடன் மறுபடி விலைமதித்த திகதிக்கு முன்னர் இருந்த பெறுமதிகள் பின்வரும் தேய்மான வீதங்களுக்கு ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன.

சொத்துக்கள் கொள்வனவுசெய்யப்பட்ட திகதி முதல் மறுபடி விலைமதிக்கப்பட்ட திகதி வரையில் பின்வரும் தேய்மான வீதங்களுக்கு ஏற்ப தேய்மானம் கணக்கிடப்பட்டுள்ளது.

**தேய்மான வீதங்கள்**

| | |
|---|---|
| காணியும் கட்டடமும் | 5 % |
| மோட்டார் வாகனம் | 20 % |
| தளபாடமும் பொருத்துக்களும் | 10 % |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 20 % |
| புகைப்பட சினிமா உபகரணம் | 10 % |
| விவசாய உபகரணங்கள் | 20 % |
| தோட்ட உபகரணங்கள் | 10 % |
| பிற உபகரணங்கள் | 20 % |
| அலுவலக உபகரணம் | 10 % |
| சிறு உபகரணங்கள், அளவை உபகரணம் | 20 % |
| தற்காலிக கட்டடம் | 5 % |
| கணினியும் மென்பொருளும் | 20 % |

2. பெற வேண்டிய மீதிகள், அறவிடமுடியாக் கடன் மற்றும் ஐயக்கடன் என்பன பொருட்டு ஒதுக்கப்பட்ட பின்னர் தேறியதாக பெறப்படத்தக்க தொகைகளில் குறிப்பிடப்படுகின்றன.

3. இனங்காணப்பட்ட எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

4. பணிக்கொடை ஏற்பாடானது ஒவ்வொரு ஊழியரும் பணிக்கொடைக்கு உரித்தான வருட எண்ணிக்கையின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

5 அறிந்த எல்லா பொறுப்புக்கள் பொருட்டு ஏற்பாடுகள் செய்யப்பட்ட பின் செலவிலும் மிஞ்சிய வருமானம் கணக்கிடப்பட்டுள்ளது.

6 கொள்விலை மற்றும் தேறப்பட்ட பெறுமதி ஆகிய பெறுமதிகளில் மிகவும் குறைந்த பெறுமதியிலேயே இருப்பு கணக்கிடப்படுகிறது என்பதுடன் பின்வரும் இருப்புகள் பொருட்டான கிரயம் கீழே குறிப்பிடப்பட்ட முறைகளின் கீழ் கணக்கிடப்படுகிறது.
   a. மூலப்பொருள் - முதல் பெற்று முதல் விநியோகித்தல் முறையில் உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   b. குறை வேலை இருப்பு – நேர் மூலப்பொருள் கிரயத்தில் காட்டப்படுகிறது.
   c. முடிவுப்பொருள் இருப்பு – நேர் மூலப்பொருள், மாறும் மேந்தலைச் செலவு மற்றும் நேர் சம்பள உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.
   d. பாவனைப்பொருள்கள் - உண்மையான கிரயத்தில் காட்டப்படுகிறது.

7. அரசிடமிருந்து பெற்ற நிதியேற்பாடு வருமானக் கூற்றில் வருமானமாக பிரத்தியேகமாகவும், செலவு விடயமாக பிரத்தியேகமாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது.

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

1 இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை 2014ஆம் ஆணடில் பின்வரும் அபிவிருத்தி செயற்றிட்டங்களை மேற்கொண்டது.

| செயற்றிட்டம் | நிதியளிக்கப்பட்டது | செயற்றிட்ட அமைவிடம் |
|---|---|---|
| பண்ணை விருத்தி - தணமல்வில | சுய நிதியம் மற்றும் கமத்தொழில் அமைச்சு | தணமல்வில |
| பண்ணை விருத்தி – புத்தல | சுய நிதியம் மற்றும் கமத்தொழில் அமைச்சு | புத்தல |
| உள்ளூர் உணவுகளை பிரபல்யப்படுத்துதல் | கமத்தொழில் அமைச்சு | சில மாவட்டங்களில் |
| நாற்று மேடை - பிரதான அலுவலகம் | சுய நிதியம் | நாரஹேன்பிட்டி |
| பண்ணை விருத்தி - அம்பலாந்தோட்டை | சுய நிதியம் | அம்பலாந்தோட்டை |
| பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுத்தும்திட்டம் | சுய நிதியம் | கலன்குட்டி |
| சுவபோஷ போசாக்குப் பெக்கற் | சுய நிதியம் | கன்னோறுவை |
| மவ்போஷ போசாக்குப் பெக்கற் | சுய நிதியம் | கன்னோறுவை |
| சேதனப் பசளை பிரயோகத்தை மேம்படுத்தல் | சுய நிதியம் | புத்தல |
| விவசாயி உற்பத்திப்பொருள் விற்பனைக்கூடம் – தெகிவளை | சுய நிதியம் | தெகிவளை |
| ஹெல்தி புட் உணவகம் | சுய நிதியம் | நாரஹேன்பிட்டி |

2 பின்வரும் வங்கி நடைமுறைக் கணக்குகள் இந்த ஆண்டில் இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்தன.

194125 - திறைசேரியிலிருந்து பெறும் நிதியேற்பாடு

கமத்தொழில் அமைச்சிலிருந்து பெறும் நிதியேற்பாடு, பண்ணை விருத்தி – புத்தல, பண்ணை விருத்தி - தணமல்வில, அம்பலாந்தோட்டை பண்ணை, சுவபோஷ செயற்றிட்டம், மவ்போஷ செயற்றிட்டம், பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை மேம்படுதததும் செயற்றிட்டம், நாற்று மேடை, தெகிவளை, விற்பனைக்கூடம், ஹெல்தி புட் உணவகம், கொம்போஸ்ட் செயற்றிட்டம்.

138295 - தெகிவளை விற்பனைக்கூடத்தின் வருமானம்

3 ஒவ்வொரு செயற்றிட்டம் பொருட்டு பிரத்தியேக பேரேகள் பேணப்படுகின்றன.

### இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை
### 2014 திசம்பர் 31இல் உள்ளவாறான நிதி நிலமைக்கூற்று

| விபரம் | குறிப்பு | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|---|
| ***சொத்துக்கள்*** | | | |
| ***நடைமுறையல்லாத சொத்துக்கள்*** | | | |

| | | | |
|---|---|---|---|
| **ஆதனம்,பொறித்தொகுதி, உபகரணம்** | 1 | ***343,497,339.56*** | ***17,652,871.01*** |
| காணி | | 307,200,000.00 | |
| கட்டடம் | | 13,039,577.17 | 4,759,997.85 |
| மோட்டார் வாகனங்கள் | | 8,707,000.00 | 2,381,167.56 |
| பொறியும் இயந்திரமும் | | 3,371,800.00 | 4,429,459.21 |
| தளபாடமும் பொருத்துக்களும் | | 1,328,520.00 | 747,777.27 |
| அலுவலக உபகரணங்கள் | | 2,016,165.50 | 1,376,385.55 |
| விவசாய உபகரணங்கள் | | 639,500.00 | 29,520.45 |
| தோட்ட உபகரணங்கள் | | - | 61,102.91 |
| பிற உபகரணங்கள் | | 2,439,350.00 | 583,811.50 |
| புகைப்பட சினிமா உபகரணங்கள் | | 3,540.00 | 26,310.00 |
| கணினி துணைகருவிகள் | | 1,292,160.00 | 2,077,363.68 |
| தற்காலிக கட்டடம் | | 2,239,986.89 | 1,129,224.26 |
| பிற முதலீடுகள் | | - | 50,750.77 |
| அளவை உபகரணங்கள் | | 130,740.00 | - |
| | | | |
| ***கட்புலனாகா சொத்து*** | | | |
| மென்பொருள் | | 1,089,000.00 | - |
| | | | |
| **குறை வேலை** | | | ***300,000.00*** |
| புதிய கட்டடத்துக்கான முதற்கிரயம் | | - | 300,000.00 |
| | | | |
| ***நிதிசார் சொத்துக்கள்*** | | ***1,028,801.48*** | ***527,034.99*** |
| வைப்புக்கள் | 2 | 948,190.98 | 409,934.08 |
| கடன் | 3 | 80,610.50 | 117,100.91 |
| | | | |
| ***நடப்புச் சொத்துக்கள்*** | | ***11,293,963.97*** | ***7,629,726.43*** |
| இருப்பு | 4 | 9,609,552.48 | 4,475,149.96 |
| கடன்படுநர் | 5 | 999,476.77 | 1,288,973.30 |
| முற்பணங்கள் | 6 | 33,400.00 | 798,215.52 |
| வருமதிகள் | 7 | 581,768.31 | 67,282.50 |
| கையிலுள்ள, வங்கியிலுள்ள காசு | 8 | 69,766.41 | 1,000,105.15 |
| | | | |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **355,820,105.01** | **26,109,632.43** |
| | | | |
| **உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **மூலதனமும் ஒதுக்கங்களும்** | | ***343,255,663.66*** | ***13,244,656.36*** |
| நிதிய மீதி | | 370,001,390.22 | 45,850,207.48 |
| திரண்ட நிதியம் | | (26,745,726.56) | (32,605,551.12) |
| | | | |
| ***நடைமுறையல்லாத பொறுப்புக்கள்*** | | ***5,426,693.20*** | ***4,676,583.60*** |
| இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாடு | 9 | 2,926,693.20 | 2,176,583.60 |
| நடு தவணைக் கடன் | | 2,500,000.00 | 2,500,000.00 |
| | | | |
| **நடப்புப் பொறுப்புக்கள்** | | ***7,137,748.15*** | ***8,188,392.46*** |
| குறுங்காலக் கடன் | | 375,000.03 | 479,166.68 |
| கடன்கொடுநர் | | - | 5,000.00 |
| பிடிப்புப் பணம் | 10 | 256,669.35 | - |
| விவசாயிகள் கடன் நிதியம் | | - | 10,000.00 |
| அட்டுறு செலவுகள் | 11 | 6,506,078.77 | 7,694.225.78 |
| | | | |
| **மொத்த உரிமை மூலதனமும் பொறுப்புக்களும்** | | **355,820,105.01** | **26,109,632.42** |

**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை**

**2014 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

| விபரம் | குறிப்பு | 2014 | 2013 |
|---|---|---|---|
| | | ரூ. | ரூ.. |
| **வருமானம்** | | **50,048,316.74** | **33,598,140.69** |
| திறைசேரி/அமைச்சு மானியங்கள் | 20,21 | 25,516,568.00 | 16,166,164.94 |
| பிற செயற்பாட்டு வருமானம் | 12 | 23,968,173.48 | 16,210,261.08 |
| சேமிப்பு கணக்கு மீதான வட்டி | | 122,366.70 | 2,600.48 |
| சொத்து அகற்றுவதன்மூலம் பெற்ற தொகை | | 68,383.56 | |
| பிற வருமானங்கள் | | 372,825.00 | 1,219,114.19 |
| | | | |
| **செலவினம்** | | **48,126,802.63** | **38,675,597.26** |
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 13 | 20,237,177.46 | 18,316,913.27 |
| பிரயாணச் செலவுகள் | 14 | 79,955.00 | 308,104.50 |
| வழங்கல்களும் தேவைப்பாடுகளும் | 15 | 1,669,799.53 | 2,143,240.98 |
| நிலையான சொத்து பழுதுபார்தலும் பராமரிப்பும் | 16 | 6,463,475.08 | 2,214,496.69 |
| மாற்றல், தொடர்பாடல், பயன்பாடு மற்றும் பிற சேவை | 17 | 19,676,395.56 | 15,692,841.82 |
| | | | |
| **செலவை மிஞ்சிய வருமானம்/ மிகை (குறைவு)** | | **1,921,514.11** | **(5,077,456.57)** |

**2014 திசம்பர் 31 இல் முடிவடைந்த வருடத்துக்கான காசுப்பாய்ச்சல் கூற்று**

| | குறிப்பு | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்து /(பயன்படுத்திய) காசுப்பாய்வு** | | | |
| வருமான வரிக்கு முன் தேறிய இலாபம் | | 1,921,514.11 | (5,077,456.57) |
| சீராக்கங்கள் | | | |
| தேய்மானம் | 1 | 4,322,664.08 | 3,933,160.16 |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம் | | (538,256.90) | (2,600.48) |
| இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாட்டுக்கான ஏற்பாடு | 9 | 750,109.60 | 458,290.70 |
| தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன் செயற்பாட்டு இலாபம் | | 6,456,030.89 | (688,606.19) |
| இருப்புகளில் (அதிகரிப்பு) /குறைவு | 3 | (5,134,402.52) | 4,135,059.38 |
| வியாபார மற்றும் பிற வருமதிகளில் (அதிகரிப்பு) /குறைவு | | 576,316.65 | 6,212,565.13 |
| வியாபார மற்றும் பிற சென்மதிகளில் அதிகரிப்பு | 11-14 | (946,477.66) | (4,453,376.06) |
| செயற்பாட்டிலிருந்து உருவாக்கிய காசு | | (5,504,563.53) | 5,894,248.45 |
| செயற்பாட்டு நடவடிக்கையிலிருந்தான தேறிய காசு | | **951,467.36** | **5,205,642.26** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) காசுப் பாய்வு** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் கொள்ளல் | 1,2 | (7,325,206.63) | (3,114,539.50) |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் மறுபடி விலைமதித்தல் | | (328,671,316.14) | - |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் அகற்றுதல்/மாற்றுதல் | | 6,129,390.12 | - |
| முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான வட்டி வருமானம் | | - | 2,600.48 |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | | **(329,867,132.65)** | **(3,111,939.02)** |
| **நிதி நடவடிக்கையிலிருந்தான/ (பயன்படுத்திய) தேறிய காசுப் பாய்வு** | | | |
| பெற்ற நிதியம் | | 30,516,568.00 | 18,976,164.94 |
| மானியம் | | (25,516,568.00) | (16,166,164.94) |
| முந்திய வருட சீராக்கம் | | (5,581,822.95) | (3,495,770.88) |
| மறுபடி விலைமதித்தல் மிகை/ குறைவு | | 328,671,316.14 | - |
| பெற்ற கடன் | | - | - |
| கடன் மீள செலுத்தல் | | (104,166.65) | (2,041,666.84) |
| | | **327,985,326.54** | **(2,727,437.72)** |
| காசும் காசுக்கு சமமானவைகளில் தேறிய அதிகரிப்பு /(குறைவு) | | (930,338.74) | (633,734.37) |
| வருட ஆரம்ப காசும் காசுக்குச் சமமானவைகளும் | | 1,000,105.15 | 1,633,839.52 |
| வருட இறுதி காசும் காசுக்குச் சமமானவைகளும் | | **69,766.41** | **1,000,105.15** |
| குறிப்பு: - A | | | |
| வங்கி மீதி | | 918,739.46 | 1,319,615.48 |
| சில்லறை காசு கட்டுநிதி | | 80,214.96 | 313,073.31 |
| கையிலுள்ள காசு | | 1,150.73 | 1,150.73 |
| | | **1,000,105.15** | **1,633,839.52** |

## இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

### 2014 திசம்பர் 31இல் முடிவடைந்த வருடத்துக்கான உரிமைமூலதனத்தில் மாற்றம் பற்றிய கூற்று

| | நிதிய மீதி | திரண்ட நிதியம் | மொத்தம் |
|---|---|---|---|
| 01.01.2014 இல் மீதி | 45,850,207.48 | (32,605,551.12) | 13,244,656.36 |
| | | | |
| பெற்ற நிதியம் | 30,516,568.00 | | 30,516,568.00 |
| | | | |
| மானியம் | (25,516,568.00) | | (25,516,568.00) |
| | | | |
| முந்திய வருட சீராக்கம் | (9,520,133.40) | 3,938,310.45 | (5,581,822.95) |
| | | | |
| குறை ஒதுக்கீடு | 328,671,316.14 | | 328,671,316.14 |
| | | | |
| வருடத்திற்கான தேறிய மிகை(குறை) | | 1,921,514.11 | 1,921,514.11 |
| | **370,001,390.22** | **(26,745,726.56)** | **343,255,663.66** |

குறிப்பு 1

**நடைமுறை அல்லாத சொத்துக்கள்**

| **சொத்து வகுதி** | காணியும் கட்டடமும் | மோட்டார் வாகனம் | பொறியும் இயந்திரமும் | அலுவலக உபகரணம் | தளபாடமும் பொருத்துக்களும | விவசாய உபகரணம | தோட்ட உபகரணம | பிற உபகரணம் | புகைப்பட, சினிமா உபகரணம | தற்காலிக கட்டடம் | சிறு உபகரணம | அளவை உபகரணம | கணினியும் மென்பொருளும் | பிற முதலீடுகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2014.01.01 **இல் மீதி** | 4,759,997.84 | 2,381,167.56 | 4,452,666.31 | 1,353,178.45 | 747,777.28 | 29,520.45 | 61,102.91 | 583,811.49 | 26,310.00 | 1,129,224.26 | - | - | 2,077,363.68 | 50,750.76 | 17,652,870.99 |
| **சேர்வனவு** | 2,219,358.00 | - | 1,732,999.00 | 1,367,066.50 | 93,620.00 | - | - | | | 1,579,163.13 | | | 633,000.00 | | 7,625,206.63 |
| **அகற்றல்/ மாற்றல் (நிலையான சொத்து)** | (6,450,456.46) | 37,605.00 | (6,248,734.09) | (1,385,290.87 ) | 1,019,172.71 | 215,634.85 | (223,209.85) | 3,800,905.39 | (400,833.92) | (894,706.70) | (78,804.00) | 266,705.01 | 455,653.20 | (178,153.80) | (10,064,513.53) |
| **அகற்றல்/ மாற்றல் (இதுவரை தேய்விட்ட பெறுமதி)** | 1,690,458.61 | (37,605.00) | 3,804,216.94 | 913,299.46 | (698,093.51) | (176,009.25) | 175,780.14 | (2,246,826.21) | 400,833.92 | 524,953.14 | 78,804.00 | (219,638.22) | (402,453.65) | 127,403.04 | 3,935,123.41 |
| **ஆண்டுக்கான தேய்மானம்** | (279,780.82) | (885,840.00) | (1,829,903.35) | (368,707.12) | (129,069.42) | (10,367.00) | (13,673.20) | (125,631.52) | (22,770.00) | (107,557.72) | | | (549,363.93) | | (4,322,664.08) |
| **தேறிய மறுபடி விலைமதித்தல்** | 318,300,000.00 | 7,211,672.44 | 1,460,555.19 | 136,619.08 | 295,112.94 | 580,720.95 | - | 427,090.85 | | 8,910.78 | | 83,673.21 | 166,960.70 | | 328,671,316.14 |
| 2014.12.31 **இல் தேறிய பெறுமதி** | **320,239,577.17** | **8,707,000.00** | **3,371,800.00** | **2,016,165.50** | **1,328,520.00** | **639,500.00** | **0.00** | **2,439,350.00** | **3,540.00** | **2,239,986.89** | **-** | **130,740.00** | **2,381,160.00** | **-** | **343,497,339.56** |
| **மறுபடி விலைமதித்தல் மிகை மொத்தம்** | 311,158,330.70 | | | | | | | | | | | | | | 311,158,330.70 |
| **மறுபடி விலைமதித்தல் குறை மொத்தம்** | - | (2,224,494.81 ) | (5,911,725.26) | (3,836,765.63 ) | (1,757,428.93) | (2,092,608.3 7) | - | (3,577,833.80) | (14,160.00) | (67,463.24) | - | (279,815.01) | (1,428,831.20) | - | (21,191,126.25) |
| **දළ ධාරණ වටිනාකම** | 320,519,357.99 | 8,707,000.00 | 3,371,800.00 | 2,016,165.50 | 1,328,520.00 | 639,500.00 | - | 2,439,350.00 | 3,540.00 | 2,239,986.89 | - | 130,740.00 | 2,381,160.00 | - | 343,777,120.38 |
| **திரண்ட தேய்மானம்** | (279,780.82) | - | - | - | - | - | - | | | | | | | | (279,780.82) |
| **ශුද්ධ ධාරණ වටිනාකම** | **320,239,577.17** | **8,707,000.00** | **3,371,800.00** | **2,016,165.50** | **1,328,520.00** | **639,500.00** | **-** | **2,439,350.00** | **3,540.00** | **2,239,986.89** | **-** | **130,740.00** | **2,381,160.00** | **-** | **343,497,339.56** |

| | | | |
|---|---|---|---|
| குறிப்பு 02 | **வைப்புக்கள்** | | |
| 2.1 | **நானாவித வைப்புக்கள்** | | |
| | இலங்கை மின்சார சபையிலுள்ள மின்சார வைப்பு | 1,500.00 | |
| | விதைக்கான வைப்பு - கமத்தொழில் அமைச்சு | 550.00 | |
| | ஹேவாகம் கோரலை (மேற்கு)ப.நோ.கூ.ச.லிமிடட் | 100.00 | |
| | றொஷான் அபேவிக்ரம வியாபாரம் | 1,025.00 | |
| | தொலைபேசி வைப்பு | 2,500.00 | |
| | மொபிடெல் - பிரோட்பான்ட் பான்ட் இணைப்பு வைப்பு | 1,500.00 | |
| | கொழும்பு (தெற்கு)ப.நோ.கூ.ச.லிமிடட | 9,599.50 | |
| | சன்டெல் கம்பனி | 15,000.00 | |
| | மொபிடெல் - பிரோட்பான்ட் பான்ட் இணைப்பு வைப்பு | 1,000.00 | |
| | கொகாகோலா பேவரேஜஸ் லிமிடட் | 4,042.00 | |
| | மகாவலி வலய அலுவலகம் - தம்புத்தேகம | 50,000.00 | |
| | இலங்கை மின்சார சபையிலுள்ள மின்சார வைப்பு- கலனகுட்டிய செயற்றிட்டம் | 20,000.00 | 106,816.50 |
| | | | **106,816.50** |
| 2.2 | **எரிபொருள் வைப்புக்கள்** | | |
| | எஸ்.எஸ்.கொத்தலாவல (பிறைவட்) லிமிடட் எரிபொருள் வைப்பு | 50,000.00 | |
| | எஸ்.எஸ்.கொத்தலாவல (பிறைவட்) லிமிடட் எரிபொருள் வைப்பு | 25,000.00 | 75,000.00 |
| | | | **75,000.00** |
| 2.3 | **பிடித்துவைத்திருக்கும் வைப்பு** | | |
| | மின்சார சபையிலுள்ள மின்சார வைப்பு | 20,000.00 | 20,000.00 |
| | | | **20,000.00** |
| 2.3 | **சேமிப்பு வைப்புக்கள்** | | |
| | சேமிப்பு- இலங்கை வங்கி, பொரளை -208315 | 572,521.35 | |
| | சேமிப்பு- இலங்கை வங்கி, ஹிங்குராக்கொட-3843150 | 129,782.85 | |
| | சேமிப்பு- இலங்கை வங்கி, அனுராதபுரம்-2473109 | 6,474.69 | |
| | சேமிப்பு- இலங்கை வங்கி, ஹிங்குராக்கொட-3843149 | 37,595.59 | 746,374.48 |
| | | | |
| | **மொத்தம்** | | **948,190.98** |
| குறிப்பு 03 | **கடன்** | | |
| | விவசாயிகள் கடன் (இணைப்பு 4) | | 80,610.50 |
| | | | **80,610.50** |

| | | | |
|---|---|---|---|
| குறிப்பு 04 | **<u>இருப்புக்கள்</u>** | | |
| | விற்பனைக்கூடம் – தெகிவளை | 1,832,983.42 | |
| | புத்தல கொம்போஸ்ட் செயற்றிட்டம் | 179,110.00 | |
| | நாற்று மேடை – நாரஹேன்பிட்டி | 456,182.00 | |
| | அரிசி மா செயற்றிட்டம் - கலன்குட்டிய | 3,480,004.50 | |
| | சுவபோஷ செயற்றிட்டம் | 1,155,542.55 | |
| | மவ்போஷ செயற்றிட்டம் | 2,352,755.46 | |
| | ஹெல்தி புட் உணவகம் | 212,587.15 | |
| | | | |
| | இருப்பு சேதம் | (59,612.60) | |
| | **மொத்தம்** | | **9,609,552.48** |
| | | | |
| குறிப்பு 05 | **கடன்படுநர்** | | |
| 5.1 | **<u>உள்ளக கடன்படுநர்</u>** | | |
| | திரு.கே.ஆர்.எம்.குணசேகர | 5,000.00 | **5,000.00** |
| 5.2 | **<u>வெளியக கடன்படுநர்</u>** | | |
| | தாவர வளர்ப்போர் கடன் (இணைப்பு 1) | 1,250.00 | |
| | கமத்தொழில் அமைச்சு | 34,233.00 | |
| | முகமது அஸ்மின் | 80,328.00 | |
| | வியாபார கடன்படுநர் (இணைப்பு *2)* | 883,014.68 | **998,825.68** |
| | **மொத்தம்** | | **1,003,825.68** |
| | | | |
| | அறவிட முடியாக் கடன் ஏற்பாடு | | **(4,348.91)** |
| | | | **999,476.77** |
| | | | |
| குறிப்பு 06 | **முற்பணங்கள்** | | |
| | பண்டிகை முற்பண மீதி | 28,900.00 | |
| | சம்பள முற்பண மீதி | 4,500.00 | 33,400.00 |
| | | | **33,400.00** |
| குறிப்பு 07 | **<u>கிடைக்கத்தக்க மீதிகள்</u>** | | |
| | வெளிவிவகார அமைச்சு | 15,500.00 | |
| | கமத்தொழில் அமைச்சு | 200,000.00 | |
| | தேசிய கால்நடை அமைச்சு | 77,050.00 | |
| | அரிசி மா தொழிற்சாலை - கலன்குட்டிய | 67,282.51 | |
| | றொமின்கோ ஹோல்டிங் தனியார் கம்பனி | 221,935.80 | 581,768.31 |

| | | | |
|---|---|---|---|
| | **மொத்தம்** | | **581,768.31** |
| | | | |
| **குறிப்பு 08** | **கையிலுள்ள காசும் வங்கிமீதியும்** | | |
| | இலங்கை வங்கி, பொரளை - க/கு இல.:194125 | 69,766.41 | 69,766.41 |
| | **மொத்தம்** | | **69,766.41** |

| **குறிப்பு 09** | **பணிக்கொடைக்கான ஏற்பாடு** | | | |
|---|---|---|---|---|
| | பெயர் | அடிப்படை சம்பளம் | சேர்ந்த திகதி | தேவையான நிதி ஏற்பாடு |
| | திரு.வை.ஏ.வி.எஸ்.பெரேரா | 58,980.00 | 1-Jun-05 | 265,410.00 |
| | திரு.டபி.ஆர்.எச்.எம்.ஆர்ஆர்.வரகாவுல்ல | 26,940.00 | 1-Mar-01 | 175,110.00 |
| | திரு.யு.ஜி.அஜித் விஜேகுமார | 26,940.00 | 1-Aug-01 | 175,110.00 |
| | திரு.டி.எம்.யு.எஸ்.திசாநாயக்க | 26,124.00 | 1-Jan-07 | 104,496.00 |
| | திரு.யு.ஜி.எல்.ரூபசிங்க | 26,940.00 | 29-Apr-06 | 107,760.00 |
| | திரு.ஜே.பி.சீ.கருணாரத்ன | 29,028.00 | 15-Dec-06 | 116,112.00 |
| | செல்வி.எஸ்.ஆர்.எம்.வை.செனவிரத்ன | 29,028.00 | 25-Mar-07 | 101,598.00 |
| | திருமதி.கே.கே.சி.அபேசிங்க | 27,810.00 | 15-Feb-07 | 97,335.00 |
| | திரு.ஜே.என்.கே.ஜயலத் | 27,810.00 | 1-Jan-07 | 111,240.00 |
| | திருமதி.கே.கே.எம்.என்.வசந்தாகுமாரி | 25,260.00 | 4-Jan-07 | 88,410.00 |
| | திரு.ஜீ.ஜீ.டி.எஸ்.பிரியங்கர | 43,164.00 | 10-Feb-07 | 151,074.00 |
| | திருமதி.எம்.எம்.சி.கே.நவரத்ன | 36,306.00 | 4-Sep-08 | 108,918.00 |
| | திருமதி.சி.என்.எச்.ஏ.சேனாநாயக்க | 27,810.00 | 11-Mar-08 | 83,430.00 |
| | திரு.ஈ.டி.சுமிந்த பிரியலால் | 25,260.00 | 16-Jun-09 | 63,150.00 |
| | திரு.ரீ.ஐ.அபேகுணவர்தன | 26,940.00 | 7-Sep-10 | 53,880.00 |
| | செல்வி.டி.எம்.நதிகா சியாமலி | 25,116.00 | 7-Sep-10 | 50,232.00 |
| | திரு.டி.எச்.சீ.ஜானக | 28,332.00 | 9-Jul-10 | 56,664.00 |
| | திரு.ஏ.எம்.ஞானசிறி | 25,116.00 | 1-Jun-09 | 62,790.00 |
| | திரு.டி.எம்.என்.திசாநாயக்க | 25,116.00 | 1-Jun-09 | 62,790.00 |
| | திரு.ஆர்.ஜே.சீ.எஸ்.எஸ்.குணவர்தன | 43,962.00 | 1-Jul-11 | 65,943.00 |
| | திரு.எம்.பீ.குணசேன | 23,419.20 | 1-Feb-07 | 81,967.20 |
| | திரு.ஏ.எம்.என்.ஆர்.குமார அபேரத்ன | 26,160.00 | 1-Apr-09 | 65,400.00 |
| | திரு.பீ.பீ.எம்.உதய குமார | 25,260.00 | 1-Oct-10 | 50,520.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | திரு.என்.எம்.ஏ.உபாலி | 25,116.00 | 1-Oct-10 | 50,232.00 |
| | திரு.ரீ.பீ.ரோகண | 26,004.00 | 1-Oct-10 | 52,008.00 |
| | திரு.எம்.ஏ.பீ.குமார | 25,116.00 | 2-Jan-11 | 50,232.00 |
| | திரு.ஈ.எம்.எச்.குமார | 26,004.00 | 22-Jan-11 | 39,006.00 |
| | திரு.பீ.எச்.ஏ.எஸ்.சந்தன | 25,116.00 | 1-Feb-11 | 37,674.00 |
| | திரு.என்.ஆர்.ரீ.ஜயசிங்க | 25,116.00 | 1-Feb-11 | 37,674.00 |
| | திரு.எல்.டி.துமிந்த சம்பத் | 26,940.00 | 1-Feb-11 | 40,410.00 |
| | செல்வி.ரீ.என்.கடுலந்த | 26,940.00 | 1-Mar-11 | 40,410.00 |
| | திருமதி.ஈ.எல்.பீ.பீ.யமுனா | 25,116.00 | 1-Jun-11 | 37,674.00 |
| | திரு.ஆர்.ஏ.கயான் | 25,116.00 | 1-Jul-11 | 37,674.00 |
| | திரு.ஐ.டி.பீ.சத்துரங்க | 25,116.00 | 1-Jul-11 | 37,674.00 |
| | திரு.எஸ்.ஏ.யு.ராஜபக்ஷ | 25,260.00 | 1-Jan-12 | 37,890.00 |
| | திரு.புந்திக சஞ்சீவ | 28,332.00 | 10-Jan-12 | 28,332.00 |
| | திரு.எச்.கே.எம்.கே.குமாரசிங்க | 25,116.00 | 10-Jan-12 | 25,116.00 |
| | திரு.எம்.ஏ. சம்பத் | 25,116.00 | 10-Jan-12 | 25,116.00 |
| | திரு.ரீ.சந்தகெலும் | 25,116.00 | 31-Mar-12 | 25,116.00 |
| | திரு.எச்.பீ.உபுல் | 25,116.00 | 10-Jan-12 | 25,116.00 |
| | | | | |
| | **இளைப்பாறல் பணிக்கொடை கடப்பாட்டிற்கான மொத்த ஏற்பாடு** | | | **2,926,693.20** |
| | | | | 2,176,583.60 |
| | | | | **750,109.60** |

| | | | |
|---|---|---|---|
| **குறிப்பு 10** | **பிடித்துவைத்திருக்கும் கட்டணம்** | | |
| | சான்ஸ் இன்ஜினியரிங் தனியார் கம்பனி | 34,733.55 | |
| | ஹொமின்கோ ஹோல்டிங் தனியார் கம்பனி | 221,935.80 | |
| | **மொத்தம்** | | **256,669.35** |
| | | | |
| **குறிப்பு 11** | **அட்டுறு செலவினம்** | | |
| | **நாற்று மேடை** | | |
| | மேலதிக நேர படி | 11,648.28 | |
| | இலங்கை உரக் கம்பனி | 20,500.00 | |
| | திகம் பாம் | 17,250.00 | |
| | தீப்தி நாற்று மேடை | 118,600.00 | |
| | இந்ராணி விதானாரச்சி | 34,680.00 | |
| | சரத் சர்விஸ் சென்ரர் | 37,360.00 | |
| | இசுறு நாற்று மேடை | 106,970.00 | |
| | லக்சறு அக்ரோ தனியார் கம்பனி | 6,700.00 | |
| | ஒனேஸ் அக்ரோ தனியார் கம்பனி | 24,981.00 | |
| | ஓகானிக் அக்ரோ லங்கா தனியார் கம்பனி | 9,555.00 | **388,244.28** |
| | | | |
| | **தெகிவளை விற்பனைக்கூடம்** | | |
| | விவசாயிகள் நம்பிக்கை நிதியம் | 346,640.64 | |
| | பி.எஸ்.ஐ.ரீ.சொலூஷன் | 4,000.00 | |
| | காசாளர் -பிரதான அலுவலகம் (மேலதிக நேரம்) | 66,126.30 | |
| | தேசிய மிருகக் காட்சிசாலை | 38,361.25 | |
| | ஜயசிறி ட்ரேடர்ஸ் | 171,311.92 | |
| | தேசிய நீர் வழங்கல் சபை | 8,418.67 | |
| | இலங்கை ரெலிகொம் | 2,710.42 | |
| | டப்.எம்.எஸ்.கே.குமார | 29,400.00 | **666,969.20** |
| | | | |
| | **தெகிவளை நாற்று மேடை** | | |
| | சிலோன் பர்டிலயிசர் கம்பனி | 36,046.00 | |
| | சீ.ஐ.சீ. குரொப்காட் தனியார் கம்பனி | 24,417.00 | |
| | தீப்தி நாற்று மேடை | 46,650.00 | |
| | இசுறு நாற்று மேடை | 32,875.00 | |
| | எல்.எச்.பீ.டி.பர்னாந்து | 10,200.00 | |
| | திகம் பாம் | 5,000.00 | |
| | லக்சறு அக்ரோ தனியார் கம்பனி | 34,100.00 | |
| | ஒனேஸ் அக்ரோ தனியார் கம்பனி | 27,566.00 | |
| | ஓகானிக் அக்ரோ லங்கா தனியார் கம்பனி | 10,500.00 | **227,354.00** |
| | | | |
| | **அரிசி மா செயற்றிட்டம்** | | |
| | நெல் சந்தைப்படுத்தும் சபை | 3,300,000.00 | |
| | புத்திக சஞ்சீவ | 1,000.00 | **3,301,000.00** |
| | | | |
| | **வட்டகச்சி பண்ணை** | | |
| | பணிப்பாளர் நாயகம் (கமத்தொழில்) | 20,400.00 | **20,400.00** |
| | | | |

| | | | |
|---|---|---|---|
| | **உள்ளூர் உணவுகளை பிரபல்யப்படுத்தும்செயற்றிட்டம்** | | |
| | இலங்கை தேசிய நீரியல்வளஅபிவிருத்தி அதிகாரசபை | 7,800.00 | **7,800.00** |
| | | | |
| | **திறைசேரி** | | |
| | கணக்காய்வு கட்டணம் - 2000 | 111,730.08 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2001 | 80,226.72 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2002 | 76,958.56 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2004 | 27,176.80 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2005 | 25,244.80 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2011 | 134,400.00 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2012 | 133,200.00 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2013 | 162,580.00 | |
| | கணக்காய்வு கட்டணம் - 2014 | 178,838.00 | |
| | காசாளர் -பிரதான அலுவலகம் (எழுதுகருவி) | 1,145.00 | |
| | டயலொக் தனியார் கம்பனி | 24,872.46 | |
| | எடிசலாட் லங்கா (பிறை) லிமிடட் | 3,586.10 | |
| | மொபிடெல் தனியார் கம்பனி | 19,286.93 | |
| | இலங்கை ரெலிகொம் | 14,125.79 | |
| | சுஜீதா சுரஞ்சி | 1,020.00 | **994,391.24** |
| | | | |
| | **விவசாயிகள் வாரம்** | | |
| | கமத்தொழில் அமைச்சு | 15,000.00 | **15,000.00** |
| | | | |
| | **ஹெல்தி புட் உணவகம்** | | |
| | ஏ.டி.குமுதுனி பத்மகுமாரி | 44,320.00 | |
| | அஜித் கலுபோவில | 286,862.00 | |
| | அமா உற்பத்திகள் | 55,590.00 | |
| | கமகே புட் உற்பத்திகள் | 95,875.00 | |
| | குணசிறி டிஸ்ரிபியுடர்ஸ் | 27,879.00 | |
| | எம்.வசந்த ஜயலால் பெரேரா | 15,700.00 | |
| | முகாமையாளர் - ஹெல்தி புட் உணவகம் | 8,400.00 | |
| | மொனிகா சுவீட் ஹவுஸ் | 17,175.00 | |
| | பீ.ஜீ.லசந்த றோசன் | 50,628.00 | |
| | பிரதீப் சஞ்சீவா த சொய்சா | 60,030.00 | |
| | ஆர்.ஏ.நந்தனி | 25,000.00 | |
| | ஆர்.பீ.குமார | 91,645.00 | |
| | எஸ்.பீ.எம்.டிஸ்ரிபியுடர்ஸ் | 88,902.00 | |
| | ஸ்ரீ டிஸ்ரிபியுடர்ஸ் | 4,550.00 | |
| | டப்.எச்.மஞ்சுல | 7,540.00 | **880,096.00** |
| | | | |
| | **மவ்போஷ செயற்றிட்டம்** | | |
| | காசாளர் -பிரதான அலுவலகம் (மேம்பாடு) | 2,660.00 | **2,660.00** |
| | | | |
| | **அம்பலாந்தோட்டை பண்ணை** | | |
| | இலங்கை மின்சாரக் சபை | 532.80 | **532.80** |
| | | | |
| | **புத்தல பண்ணை** | | |
| | இலங்கை மின்சாரக் சபை | 1,631.25 | **1,631.25** |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | **மொத்தம்** | | **6,506,078.77** |

**குறிப்பு 12 :வியாபார மற்றும் இலாப நட்டக் கணக்குகள்**

12.1 **தெகிவளை விற்பனைக்கூடம்**

**2014.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **47,285,238.21** | **54,795,215.59** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 1,620,879.72 | 1,382,949.40 |
| கொள்வனவு | 38,830,172.31 | 45,232,653.06 |
| போக்குவரத்து | 60,780.00 | 50,110.00 |
| இருப்பு சேதம் | - | (4,035.00) |
| இறுதி இருப்பு | (1,832,983.42) | (1,240,388.97) |
| | 38,678,848.61 | 45,421,288.49 |
| **மொத்த இலாபம்** | **8,606,389.60** | **9,373,927.10** |
| | | |
| **விற்பனை வருமானம்** | | |
| மீன் விற்பனை வருமானம் | 860,148.48 | 1,083,078.84 |
| தானிய வகை விற்பனை வருமானம் | 2,738,944.02 | 2,620,083.33 |
| சில்லறைப்பொருள் விற்பனைவருமானம் | 13,948,570.87 | 17,988,746.42 |
| உண்டிச்சாலை வருமானம் | 4,614,864.10 | 4,029,516.00 |
| தாவர விற்பனை வருமானம் | 2,175,431.00 | 1,416,790.00 |
| அரிசி விற்பனை வருமானம் | 2,951,041.78 | 3,564,266.00 |
| பலசரக்கு விற்பனை வருமானம் | 1,696,588.34 | 1,590,030.10 |
| பாரம்பரியஅரிசி விற்பனைவருமானம் | 365,706.00 | 275,327.00 |
| மரக்கறி விற்பனை வருமானம் | 10,231,575.62 | 11,175,890.40 |
| மிருகக் காட்சிசாலை சில்லறைப்பொருள் விற்பனைவருமானம் | 7,702,368.00 | 9,056,435.50 |
| மிருகக் காட்சிசாலை உண்டிச்சாலை விற்பனைவருமானம் | - | 1,995,052.00 |
| | **47,285,238.21** | **54,795,215.59** |
| | | |
| **கொள்வனவு** | | |
| பெக்கற் பண்ணல் | 283,088.80 | |
| விவசாய உபகரண கொள்வனவு | 171,530.00 | |

| | | |
|---|---|---|
| இரசாயன பொருள் கொள்வனவு | 107,681.00 | |
| விதை வகை கொள்வனவு | 48,610.00 | |
| உரம் கொள்வனவு | 639,697.00 | |
| தாவர கொள்வனவு | 615,955.00 | |
| மிருகக் காட்சிசாலை சில்லறைப்பொருள் கொள்வனவு | 4,771,894.36 | |
| சிற்றுண்டி கொள்வனவு | 3,572,115.26 | |
| பாரம்பரியஅரிசி கொள்வனவு | 192,950.00 | |
| அரிசி கொள்வனவு | 2,738,355.00 | |
| மீன் கொள்வனவு | 682,012.40 | |
| பலசரக்கு கொள்வனவு | 1,233,667.67 | |
| தானிய வகை கொள்வனவு | 2,259,087.08 | |
| சில்லறைப்பொருள் கொள்வனவு | 12,649,834.24 | |
| மரக்கறி கொள்வனவு | 8,863,694.50 | |
| | **38,830,172.31** | **45,232,653.06** |
| **பொதுச் செலவுகள்** | | |
| சம்பளமும் படிகளும் | 2,884,942.67 | 3,123,351.80 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 267,343.37 | 304,544.67 |
| ஊழியர் நமபிக்கை நிதியம் | 66,835.85 | 76,136.17 |
| மேலதிக நேரம் | 818,654.18 | 888,463.38 |
| மின்சாரக் கட்டணம் | 403,354.41 | 628,093.81 |
| உபசரணை | 11,100.00 | 2,128.50 |
| நானாவித செலவுகள் | 53,466.22 | 51,041.72 |
| ஏனைய இருப்பு | 5,855.00 | 10,805.00 |
| அச்சடித்தல், வெளியீடுகள் | 21,912.00 | 44,100.00 |
| மேம்பாட்டுச் செலவு | 8,940.00 | 14,313.25 |
| காணி, கட்டட திருத்தம் | 132,593.50 | 64,929.00 |
| வாகன திருத்தம் | 5,740.00 | 7,138.00 |
| அலுவலக உபகரண திருத்தமும் பராமரிப்பும் | 123,952.00 | 34,829.00 |
| இயந்திர திருத்தம் | 3,725.00 | 12,900.00 |
| பதிவுக் கட்டணம் | 2,821.50 | - |
| எரிபொருள் | 172,920.00 | 159,029.00 |
| எழுதுகருவிகள் | 58,289.68 | 70,576.00 |
| வரி | 160,054.37 | 58,148.88 |
| தொலைபேசியும் அஞ்சலும் | 39,068.77 | 27,029.50 |
| நீர் கட்டணம் | 289,497.77 | 449,696.80 |

| | | |
|---|---|---|
| நலனோம்பல் செலவு | 75,068.50 | 36,025.50 |
| மிருகக்காட்சிசாலை மின்சார செலவு | 79,844.40 | 90,212.00 |
| மிருகக் காட்சிசாலை வாடகை | 435,600.00 | 345,000.00 |
| வட்டி | - | 125,781.26 |
| பெக்கற் பண்ணல் | - | 304,162.50 |
| ஏனைய உபகரண திருத்தம் | - | 3,935.00 |
| பிரயாணச் செலவு | - | 5,536.00 |
| **மொத்தச் செலவுகள்** | **6,121,579.19** | **6,937,906.74** |
| தேறிய இலாபம் | **2,484,810.41** | **2,436,020.36** |

12.2 **விற்பனைக்கூடம், நாற்று மேடை மற்றும் பிரதான அலுவலகம்**

**2014.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| விற்பனை வருமானம் | **6,378,381.02** | **4,737,775.45** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 403,350.00 | 719,006.98 |
| கொள்வனவு | 4,411,191.00 | 4,155,646.00 |
| இருப்பு சேதம் | | (3,932.00) |
| இறுதி இருப்பு | (456,182.00) | (403,350.00) |
| | 4,358,359.00 | 4,467,370.98 |
| **மொத்த இலாபம்** | **2,020,022.02** | **270,404.47** |
| **<u>விற்பனை வருமானம்</u>** | | |
| மரக்கறி விற்பனை வருமானம் | 136,965.00 | |
| தாவர விற்பனை வருமானம் | 4,177,538.65 | |
| உரம் விற்பனை வருமானம் | 1,316,170.00 | |
| விதை விற்பனை வருமானம் | 133,150.37 | |
| கிருமிக்கொல்லி விற்பனை வருமானம் | 300,388.00 | |
| விவசாய உபகரண விற்பனை வருமானம் | 314,169.00 | |
| | **6,378,381.02** | **4,737,775.45** |
| **<u>கொள்வனவு</u>** | | |
| பெக்கற் பண்ணல் | 38,612.00 | |
| விவசாய உபகரண கொள்வனவு | 257,560.00 | |
| இரசாயன பொருள் கொள்வனவு | 210,675.00 | |
| விதை வகை கொள்வனவு | 72,082.50 | |

| | | |
|---|---|---|
| உரம் கொள்வனவு | 1,243,856.50 | |
| தாவர கொள்வனவு | 2,588,405.00 | |
| | **4,411,191.00** | **4,155,646.00** |
| **பொதுச் செலவுகள்** | | |
| சம்பளமும் படிகளும் | 1,138,855.80 | 650,390.61 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 108,333.48 | 66,987.21 |
| ஊழியர் நமபிக்கை நிதியம் | 26,089.23 | 16,746.81 |
| மேலதிக நேரம் | 88,081.42 | 16,717.97 |
| பிரயாணச் செலவு | 68.00 | - |
| எழுதுகருவி | 4,750.00 | - |
| அச்சடித்தலும் வெளியீடுகளும் | 45,975.00 | 21,940.00 |
| பிற இருப்பு | 990.00 | - |
| உபசரணை | 183,463.64 | 2,350.00 |
| எரிபொருள் | 6,000.00 | 16,500.00 |
| நானாவித செலவுகள் | 14,718.00 | - |
| வாகன திருத்தம் | 3,867.00 | - |
| கட்டட திருத்தம் | 47,322.00 | - |
| பிரயாணச் செலவு | 13,023.00 | 6,500.00 |
| தொலைபேசி | 17,316.40 | 9,796.00 |
| நீர் வழங்கல் | 9,484.86 | 63,431.64 |
| பெக்கற் பண்ணல் | - | 28,626.52 |
| விவசாய உபகரண திருத்தம் | - | 4,527.00 |
| வீட்டுதோட்ட உபகரண திருத்தமும் பராமரிப்பும் | - | 10,060.00 |
| **மொத்தச் செலவுகள்** | **1,708,337.83** | **914,573.76** |
| தேறிய இலாபம் | **311,684.19** | **(644,169.29)** |

12.3 **பெருந்தோட்டப்பகுதியில் அரிசி மா பாவனையை பிரபல்யப்படுத்தும் செயற்றிட்டம் - கலன்குட்டிய**

**2014.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான உற்பத்தி,வியாபாரக் கணக்கு**

| விடயம் | 2014 ரூ. | 2013 ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 750,058.10 | 2,722,142.40 |
| கொள்வனவு | 11,307,072.72 | 6,877,327.80 |
| இருப்பு சேதம் | (59,612.60) | |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (3,352,991.90) | (750,058.10) |
| மூலப்பொருள் செலவு | 8,644,526.32 | 8,849,412.10 |
| நேர் சம்பளம் | 1,383,456.67 | 2,573,031.36 |
| போக்குவரத்து | 20,231.42 | |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | 186,314.70 |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்தி செலவு | 10,048,214.41 | 11,608,758.16 |
| விற்பனை வருமானம் | **14,300,287.00** | **13,249,247.25** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 11,204.00 | 196,989.20 |
| உற்பத்தி செலவு | 10,048,214.41 | 11,608,758.16 |
| | 10,059,418.41 | 11,805,747.36 |
| இறுதி இருப்பு | (67,400.00) | (11,204.00) |
| | 9,992,018.41 | 11,794,543.36 |
| **மொத்த இலாபம்** | **4,308,268.59** | **1,454,703.89** |
| **<u>விற்பனை வருமானம்</u>** | | |
| அரிசி மா விற்பனை வருமானம் | 6,866,758.00 | 7,615,371.45 |
| தோசை கலவை வருமானம் | 7,201,304.00 | 4,734,303.15 |
| தவிடு அரிசி விற்பனை வருமானம் | 8,450.00 | - |
| பாரம்பரிய அரிசி வருமானம் | 223,775.00 | 539,463.85 |
| கறுப்பு உளுந்து விற்பனை வருமானம் | - | 1,680.00 |
| பிற வருமானங்கள் | - | 47,703.80 |
| அரிசி விற்பனை வருமானம் | - | 308,945.00 |
| உரொட்டி கலவை வருமானம் | - | 1,260.00 |
| சோள மா விற்பனை வருமானம் | | 520.00 |
| | **14,300,287.00** | **13,249,247.25** |
| **<u>கொள்வனவு</u>** | | |

| | | |
|---|---|---|
| பெக்கற் பண்ணல் | 1,166,829.72 | |
| கறுப்பு உளுந்து கொள்வனவு | 4,172,700.00 | |
| அரிசி மா கொள்வனவு | 2,074,400.00 | |
| அரிசி கொள்வனவு | 3,893,143.00 | |
| | **11,307,072.72** | **6,877,327.80** |
| **பொதுச் செலவுகள்** | | |
| மின் கட்டணம் | 50,115.91 | 89,938.71 |
| உபசரணை | 23,181.00 | 46,730.13 |
| எரிபொருள் | 58,740.00 | 167,587.80 |
| நானாவித செலவுகள் | 2,318.68 | 4,793.00 |
| எழுதுகருவி | 11,000.00 | - |
| காணி கட்டட திருத்தம் | 3,340.00 | 1,700.00 |
| மோட்டார் வாகன திருத்தமும் பராமரிப்பும் | 650.00 | 4,215.00 |
| அலுவலக உபகரண திருத்தமும் பராமரிப்பும் | 450.00 | - |
| இயந்திர திருத்தமும் பராமரிப்பும் | 1,947.52 | 116,252.00 |
| தேய்மானம் | 9,698.63 | - |
| எழுதுகருவிகள் | 688.00 | 8,996.00 |
| தொலைபேசி | 18,009.40 | 11,910.00 |
| அச்சடித்தலும் பிரயாணமும் | 208.00 | - |
| நிருவாகச் செலவு | - | 44,101.60 |
| மா குத்தும் செலவு | - | 220,066.00 |
| பிற இருப்பு | - | 1,120.00 |
| பெக்கற் பண்ணல் செலவு | - | 504,024.74 |
| பிற உபகரண திருத்தமும் பராமரிப்பும் | - | 5,510.00 |
| பதிவுக் கட்டணம் | - | 5,950.00 |
| பிரயாணமும் இணைந்த படியும் | - | 3,948.00 |
| போக்குவரத்து | - | 171,032.00 |
| **மொத்தச் செலவுகள்** | **180,347.14** | **1,407,874.98** |
| தேறிய இலாபம் | **4,127,921.45** | **46,828.91** |

12.4 **சுவபோஷ உற்பத்தி தொழிற்சாலை - கன்னோறுவை**

**2014.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 458,574.00 | 344,235.75 |
| கொள்வனவு | 6,513,780.35 | 3,121,551.00 |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (999,592.55) | (458,574.00) |
| மூலப்பொருளுக்கான செலவு | 5,972,761.80 | 3,007,212.75 |
| நேர் சம்பளம் | 358,378.45 | 295,887.50 |
| போக்குவரத்து | 22,100.00 | - |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திக் கிரயம் | 6,353,240.25 | 3,303,100.25 |
| விற்பனை வருமானம் | **8,493,152.50** | **5,412,925.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 10,000.00 | 565,920.00 |
| உற்பத்திக் கிரயம் | 6,353,240.25 | 3,303,100.25 |
| | 6,363,240.25 | 3,869,020.25 |
| இறுதி இருப்பு | (155,950.00) | (10,000.00) |
| | 6,207,290.25 | 3,859,020.25 |
| **மொத்த இலாபம்** | **2,285,862.25** | **1,553,904.75** |
| **<u>கொள்வனவு</u>** | | |
| பெக்கற் பண்ணல் | 1,150,560.35 | |
| பாசிப் பயறு கொள்வனவு | 1,719,000.00 | |
| சோயா கொள்வனவு | 1,792,295.00 | |
| அரிசி கொள்வனவு | 1,851,925.00 | |
| | **6,513,780.35** | **3,121,551.00** |
| **பொதுச் செலவுகள்** | | |
| மோட்டார் வாகன திருத்தமும் பராமரிப்பும் | 2,560.00 | - |
| இணந்திர திருத்தமும் பராமரிப்பும் | 48,838.00 | - |
| உபசரணை | 3,880.00 | 3,802.00 |
| எரிபொருள் | 4,000.00 | 26,700.00 |
| மின் கட்டணம் | 210,650.89 | 240,406.20 |
| பதிவுக் கட்டணம் | 10,000.00 | 20,000.00 |
| அச்சடித்தல் | 15,400.00 | 515,981.79 |
| பெக்கற் பண்ணல் | - | 37,788.56 |

| | | |
|---|---|---|
| **மொத்தச் செலவுகள்** | **295,328.89** | **844,678.55** |
| **தேறிய இலாபம்** | **1,990,533.36** | **709,226.20** |

12.5 **ஹெல்தி புட் உணவகம்**

**2014.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபாரக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. |
|---|---|
| விற்பனை வருமானம் | **16,395,350.08** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| கொள்வனவு | 14,308,582.42 |
| சம்பளம் | 2,793,551.79 |
| போக்குவரத்து | - |
| இறுதி இருப்பு | (212,587.15) |
| | 16,889,547.06 |
| **மொத்த இலாபம்** | **(494,196.98)** |
| **விற்பனை வருமானம்** | |
| சில்லறைப்பொருள் விற்பனை வருமானம் | 1,343,605.50 |
| தானிய வகை விற்பனை வருமானம் | 736,777.10 |
| பலசரக்கு விற்பனை வருமானம் | 141,748.00 |
| மீன் விற்பனை வருமானம் | 13,550.00 |
| பாரம்பரிய அரிசி விற்பனை வருமானம் | 773,560.00 |
| உண்டிச்சாலை விற்பனைவருமானம் | 1,602,203.25 |
| அரிசி மா விற்பனை வருமானம் | 471,375.00 |
| காலையுணவிலிருந்து பெற்ற வருமானம் | 2,203,663.00 |
| மதிய உணவிலிருந்து பெற்ற வருமானம் | 3,374,735.00 |
| இரவு உணவிலிருந்து பெற்ற வருமானம் | 1,021,263.50 |
| இனிப்பு பண்ட விற்பனை வருமானம் | 531,117.70 |
| உண்டிச்சாலை விற்பனை வருமானம் | 70,912.50 |
| குடிபான விற்பனை வருமானம் | 2,295,781.00 |
| NFPB உற்பத்தி விற்பனை வருமானம் | 1,529,022.30 |
| பழ விற்பனை வருமானம் | 286,036.23 |
| | **16,395,350.08** |
| **கொள்வனவு** | |

| | |
|---|---|
| குடிபான கொள்வனவு | 288,496.00 |
| பயிட் கொள்வனவு | 7,296.00 |
| சிற்றுண்டிகளுக்கான கொள்வனவு | 48,545.00 |
| இனிப்பு பண்ட கொள்வனவு | 511,811.20 |
| எரிவாயு கொள்வனவு | 797,587.00 |
| பெக்கற் பண்ணல் | 304,375.00 |
| உண்டிச்சாலைக்கான கொள்வனவு | 316,848.50 |
| பாரம்பரிய அரிசி கொள்வனவு | 618,620.00 |
| அரிசி கொள்வனவு | 1,264,889.50 |
| மீன் கொள்வனவு | 1,624,863.20 |
| பலசரக்கு கொள்வனவு | 694,154.50 |
| தானிய வகை கொள்வனவு | 448,500.00 |
| சில்லறைப் பொருள் கொள்வனவு | 4,659,102.63 |
| மரக்கறி கொள்வனவு | 2,723,493.89 |
| | **14,308,582.42** |
| **பொதுச் செலவுகள்** | |
| ஊபசரணை | 4,950.00 |
| எரிபொருள் | 2,000.00 |
| பயிற்சி, நிகழ்ச்சித்திட்டங்கள் | 14,377.50 |
| பிற செலவுகள் | 62,425.00 |
| பிற இருப்பு | 5,362.00 |
| அலுவலக உபகரண திருத்தமும் பராமரிப்பும் | 101,042.70 |
| பிற உபகரண திருத்தமும் பராமரிப்பும் | 36,813.00 |
| இயந்திர திருத்தமும் பராமரிப்பும் | 5,788.00 |
| காணி கட்டட திருத்தம் | 160,645.50 |
| பிரயாணச் செலவு | 134,302.00 |
| தொலைபேசி | 17,316.40 |
| மின் கட்டணம் | 234,570.58 |
| நீர் பட்டியல் | 165,394.20 |
| எழுதுகருவிகள் | 60,330.00 |
| அச்சடித்தல் செலவு | 3,500.00 |
| | **1,008,816.88** |
| தேறிய இலாபம் | **(1,503,013.86)** |

12.6 **மவ்போஷ செயற்றிட்டம்**

**2014.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| ஆரம்ப இருப்பு | 576,998.00 | 444,209.02 |
| கொள்வனவு | 9,439,396.43 | 8,158,053.00 |
| நேர் சம்பளம் | 3,966,875.34 | 1,529,221.95 |
| போக்குவரத்து | 752,393.00 | 432,359.00 |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (1,681,715.46) | (576,998.00) |
| | 13,053,947.31 | 9,986,844.97 |
| ஆரம்ப இருப்பு - குறைவேலை | - | - |
| இறுதி இருப்பு - குறைவேலை | - | - |
| உற்பத்திக் கிரயம் | 13,053,947.31 | 9,986,844.97 |
| விற்பனை வருமானம் | **19,201,680.00** | **13,130,423.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | | |
| ஆரம்ப இருப்பு | 14,220.00 | 566,720.00 |
| உற்பத்திச் செலவு | 13,053,947.31 | 9,986,844.97 |
| | 13,068,167.31 | 10,553,564.97 |
| இறுதி இருப்பு | (671,040.00) | (14,220.00) |
| | 12,397,127.31 | 10,539,344.97 |
| **மொத்த இலாபம் / நட்டம்** | **6,804,552.69** | **2,591,078.03** |
| **<u>கொள்வனவு</u>** | | |
| பெக்கற் பண்ணல் | 1,485,121.43 | |
| மா குத்தும் செலவு | 107,000.00 | |
| சோளம் கொள்வனவு | 904,560.00 | |
| பால் மாகொள்வனவு | 710,120.00 | |
| சீனி கொள்வனவு | 588,000.00 | |
| சோயா எண்ணெய் கொள்வனவு | 661,500.00 | |
| சோயா கொள்வனவு | 1,534,200.00 | |
| அரிசி கொள்வனவு | 3,444,125.00 | |
| சில்லறைப்பொருள் கொள்வனவு | 4,770.00 | |
| | **9,439,396.43** | **8,158,053.00** |
| **<u>மேந்தலைச் செலவுகள்</u>** | | |
| மின் கட்டணம் | 750,112.18 | |

| | | |
|---|---|---|
| | | 240,406.20 |
| மேம்பாட்டுச் செலவு | 11,060.00 | - |
| பதிவுக் கட்டணம் | 4,000.00 | - |
| காணி கட்டட திருத்தம் | 13,528.00 | - |
| உபசரணை செலவு | 88,415.00 | 167,305.50 |
| எரிபொருள் செலவு | 160,866.50 | 379,433.80 |
| மோட்டார் வாகன திருத்தமும் பராமரிப்பும் | 1,750.00 | - |
| பிற செலவுகள் | 7,255.00 | 43,480.00 |
| பிற இருப்பு | 7,843.00 | - |
| அச்சடித்தல் | 183,640.00 | 318,152.86 |
| இயந்திர திருத்தமும் பராமரிப்பும் | 94,612.40 | 42,200.00 |
| நிருவாகச் செலவு | - | 60,278.00 |
| அரைத்தல் செலவு | - | 40,000.00 |
| பிற உபகரணங்கள் | - | 54,762.75 |
| பெக்கற் பண்ணல் செலவு | - | 821,757.66 |
| **மொத்தச் செலவுகள்** | **1,323,082.08** | **2,167,776.77** |
| தேறிய இலாபம் | **5,481,470.61** | **423,301.26** |

12.7 **புத்தல கொம்போஸ்ட்**

**2014.12.31இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார, இலாப நட்டக் கணக்கு**

| விடயம் | 2014<br>ரூ. |
|---|---|
| ஆரம்ப இருப்பு | - |
| செய்கைக் கிரயம் | 217,924.69 |
| நேர் சம்பளம் | - |
| போக்குவரத்து | - |
| இறுதி இருப்பு - மூலப்பொருள் | (136,460.00) |
| | 81,464.69 |
| ஆரம்ப இருப்பு ஜ குறைவேலை | - |
| இறுதி இருப்பு ஜ குறைவேலை | - |
| உற்பத்திச் செலவு | 81,464.69 |
| விற்பனை வருமானம் | **476,090.00** |
| கழி: விற்பனைக் கிரயம் | |
| ஆரம்ப இருப்பு | - |
| உற்பத்திச் செலவு | 81,464.69 |
| இறுதி இருப்பு | (42,650.00) |

| | |
|---|---|
| | **38,814.69** |
| **மொத்த இலாபம் / நட்டம்** | **437,275.31** |
| | |
| **கொள்வனவு** | |
| மூலப்பொருள் கொள்வனவு | 30,250.00 |
| பெக்கற் பண்ணல் | 187,674.69 |
| | **217,924.69** |
| **மேந்தலைச் செலவுகள்** | |
| நிருவாகச் செலவு | 3,107.00 |
| பண்ணை உபகரண திருத்தம் | 3,300.00 |
| மின் கட்டணம் | 16,117.59 |
| சம்பளமும் படிகளும் | 98,677.60 |
| ஊழியர் சேமலாப நிதியம் | 5,950.11 |
| ஊழியர் நமபிக்கை நிதியம் | 1,148.79 |
| உபசரணை செலவு | 3,084.00 |
| பிற உபகரண திருத்தம் | 2,765.00 |
| பங்களிப்பு செலவு | 40,346.34 |
| எரிபொருள் செலவு | 2,385.00 |
| பிரயாணச் செலவு | 103,500.00 |
| **மொத்தச் செலவுகள்** | **280,381.43** |
| தேறிய இலாபம் | **156,893.88** |

**வியாபார, இலாப நட்டக் கணக்கு**

| | |
|---|---|
| தெகிவளை விற்பனைக்கூடம் | 8,606,389.60 |
| நாற்று மேடை | 2,020,022.02 |
| கலன்குட்டிய அரிசி மா செயற்றிட்டம் | 4,308,268.59 |
| சுவபோஷ செயற்றிட்டம் | 2,285,862.25 |
| ஹெல்தி புட் | (494,196.98) |
| மவ்போஷ செயற்றிட்டம் | 6,804,552.69 |
| புத்தல கொம்போஸ்ட் | 437,275.31 |
| **மொத்தம்** | **23,968,173.48** |

குறிப்பு 13 **ஆளுக்குரிய வேதனாதிகள்**

| விடயம் | 2014 | 2013 |
|---|---|---|

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| சம்பளமும் படிகளும் | 16,784,848.49 | 14,668,539.43 |
| மேலதிக நேர, லீவுக்கு பதிலாக சமப்ளம் | 1,416,767.76 | 1,776,625.32 |
| ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகை | 1,629,244.26 | 1,492,390.56 |
| ஊழிய நம்பிக்கை நிதிய உதவுதொகை | 406,316.95 | 379,357.96 |
| | 20,237,177.46 | 18,316,913.27 |

குறிப்பு 14 **பிரயாணச் செலவு**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| பிரயாணமும் உணவுப் படியும் | 79,955.00 | 123,575.50 |
| மோட்டார் வாகன ஓட்டச் செலவு | - | 184,529.00 |
| | 79,955.00 | 308,104.50 |

குறிப்பு 15 **வழங்கல்களும் தேவைப்பாடுகளும்**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| அச்சிடலும் வெளியீடும் | 593,170.00 | 1,012,301.25 |
| எழுதுகருவி, நுகர்பொருள் | 441,524.52 | 460,420.50 |
| புத்தக செய்தித்தாள், சஞ்சிகை | 59,136.00 | 103,065.60 |
| பிற பதிவேட்டுப் பொருள் | 24,900.00 | - |
| உபசரிப்பு | 551,069.01 | 567,453.63 |
| | 1,669,799.53 | 2,143,240.98 |

குறிப்பு 16 **நிலையான சொத்துக்களின் திருத்தமும் பராமரிப்பும்**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| கட்டடங்கள் | 1,358,933.41 | 197,004.70 |
| மோட்டார் வாகனங்கள் | 1,792,017.42 | 1,103,398.31 |
| அலுவலக உபகரணங்கள் | 694,452.86 | 190,809.00 |
| பிற உபகரணங்கள் | 45,828.00 | 69,482.75 |
| பொறியும் இயந்திரமும் | 545,663.92 | 255,870.00 |
| விவசாய உபகரணங்கள் | 1,016,499.62 | 4,527.00 |
| தோட்ட உபகரணங்கள் | 683,810.77 | 67,188.00 |
| மோட்டார் வாகனங்களின் காப்புறுதியும் பதிவும் | 326,269.08 | 326,216.93 |
| | 6,463,475.08 | 2,214,496.69 |

குறிப்பு 17 **மாற்றல், தொடர்பாடல், பயன்பாடு மற்றும் பிற சேவைகள்**

| விடயம் | 2014<br>ரூ. | 2013<br>ரூ. |
|---|---|---|
| போக்குவரத்து கட்டணம் | 1,224,639.58 | 1,295,792.60 |
| அஞ்சலும் தொலைபேசியும் | 699,406.15 | 558,246.25 |
| மின் கட்டணம் | 2,377,153.25 | 2,026,344.40 |
| வங்கிக் கட்டணம் | 62,450.00 | 47,946.82 |
| தேய்மானம் | 4,322,664.08 | 3,933,160.16 |
| நானாவித செலவுகள் | 192,950.90 | 174,213.72 |
| நீர்க் கட்டணம் | 680,065.20 | 686,816.28 |
| கணக்காய்வுக் கட்டணம் | 178,838.00 | 162,580.00 |
| கட்டணமும் வரியும் | 160,054.37 | 84,098.88 |
| செயற்பாட்டு, பதனிடல் செலவு | 286,955.00 | 102,634.00 |
| கூலிகள் | 435,600.00 | 345,000.00 |
| பயிற்சியும் புலமைப்பரிசிலும் | 61,877.50 | 16,500.00 |
| பணிப்பாளர் சபை உறுப்பினர் கட்டணம் | 271,780.64 | 229,080.00 |
| செயலாளர் கட்டணம் | 3,500.00 | 3,500.00 |
| நலனோம்பல் கட்டணம் | 148,393.10 | 68,696.50 |
| நட்டங்களும் பதிவழிப்புகளும் | 59,612.60 | 24,964.00 |
| பிரச்சாரம்,கண்காட்சி,வேலையரங்கு | 6,392,219.36 | 2,779,161.42 |
| மேம்பாட்டு செலவு, பிரச்சாரம் | 20,000.00 | 194,053.85 |
| பணிக்கொடையும் நட்டஈடும் | 750,109.60 | 458,290.70 |
| அறவிடமுடியாக்கடன் | - | - |
| வட்டி செலவு | 112,890.63 | 125,781.26 |
| பொதிசெய்யும் செலவு | - | 1,761,089.88 |
| அரைக்கும் செலவு | - | 261,974.00 |
| பிற பொருள்கள் | - | 27,167.00 |
| சொத்து மாற்றல் நட்டம் | 450,000.00 | |
| பாதிக்கும் நட்டம் | 533,414.20 | |
| பொதுச் செலவுகள் | 251,821.40 | 325,750.10 |
| | 19,676,395.56 | 15,692,841.82 |

18. நேர் அபிவிருத்தி செலவினம் மானியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது .

19. பிரதான அலுவலக நிருவாகம் பொருட்டு உறப்பட்ட சகல செலவினங்களும் திறைசேரி நிதியங்களின் கீழ் காட்டப்பட்டுள்ளன.

20. திறைசேரி நிதியங்கள்

| விபரம் | வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடு | 2014 உண்மையான செலவினம் | 2014இல் திறைசேரியிடம் இருந்து பெற்ற நிதியேற்பாடு | சேமிப்பு/குறைவு |
|---|---|---|---|---|
| மீண்டுவரும் | 26,948,745.33 | 19,111,074.35 | 16,500,000.00 | 7,837,670.98 |
| மூலதன | 5,000,000.00 | 5,233,724.34 | 5,000,000.00 | (233,724.34) |
| | | | 21,500,000.00 | |

21. இருப்பினும், செயற்றிட்டங்கள் பொருட்டு கமத்தொழில் அமைச்சிடமிருந்து பெற்ற நிதியம் பின்வருமாறு மீண்டுவரும், மூலதன செலவினங்களாக பயன்படுத்தப்பட்டன.

| விபரம் | மூலதன | மீண்டுவரும் | மொத்தம் |
|---|---|---|---|
| செயற்றிட்டம் | - | 9,016,568.00 | 9,016,568.00 |
| | | | **9,016,568.00** |

22.. அம்பலாந்தோட்டை பண்ணையில் அமைக்கப்பட்ட வேலி பொருட்டு செலுத்தப்படவுள்ள ரூ.3,209,728.53 தொகை தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 02401-13 எனும் வழக்கு இலக்கத்தின் கீழ் விசாரிக்கப்பட்டு வருகின்றது.

**<u>கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் அறிக்கை</u>**

**உள்ளடக்கம்**

இந்த கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்பட்டது. பணிப்பாளர் சபையிலிருந்து இரண்டு பேர், கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்திலிருந்து ஒருவர், சபையின் உதவிப் பணிப்பாளர் (நிதி) ஆகியோர் இதில் உள்ளடங்குவர். அரசாங்க திறைசேரியை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் தலைவராக செயலாற்றுகின்றார்.

**கூட்டங்கள்**

இந்த ஆண்டினுள் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடைபெற்றதுடன் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் பற்றி கலந்துரையாடப்பட்டது. அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் மற்றும் கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களம் ஆகியவற்றினால் காலத்திற்கு காலம் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு விசாரணைகள் குழுவினால் மதிப்பீடு செய்யப்பட்டு தேவையான பரிந்துரைகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டன.

**முடிவு**

அறிக்கையை மிகவும் நுண்ணிப்பாக பரிசீலனை செய்ததன் பிற்பாடு குழுவானது, சபையின் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாட்டு முறைகளுக்கு தாக்கம் செலுத்தும் முக்கிய பிரச்சினைகளை வகைப்படுத்தி முகாமைத்துவத்திற்கு மதியுரை வழங்கியது.

திரு. டப்.எச்.ஜீ.கோசல
தலைவர்
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

எனது இல.: எல்பி/டி/எச்சீபீ/1/14/05 2015 ஒற்றோபர் 19

தலைவர்,

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மேற்படி அறிக்கையானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்/டபிள்யு.பி.சீ.விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் தலைமையதிபதி (பதில்)

பிரதிகள் :
1. செயலாளர் - கமத்தொழில் அமைச்சு
2. செயலாளர் - நிதி அமைச்சு

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**

எனது இல.: எல்பி/டி/எச்சீபீ/1/14/05 2015 ஒற்றோபர் 19

தலைவர்,

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபை

**இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, மூலதன மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1973 இன் 15ஆம் இல. இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச்சபைச் சட்டத்தின் 14ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை சபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் அனுப்பி வைக்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சருவதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) நேரொத்த இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்கெல்லை மற்றும் அளவினை தீர்மானிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உட்பிரிவுகள்மூலம் தற்றுணிபுரீதியான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அளிக்கப்படுகிறது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்**

--------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி ரூ.41,330,074 அரச மூலதன மானியம் சபைக்கு கிடைத்திருந்ததுடன் அது பிரத்தியேக கணக்கொன்றாக வெளிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. இந்த நிதியேற்பாட்டினை பயன்படுத்தி கொள்ளப்பட்ட சொத்துக்கள் பற்றி அறிக்கை பேணப்பட்டிருக்கவில்லை என்பதுடன் குறித்த சொத்துக்கள் தேய்மானம் இடப்பட்டிருந்தபோதிலும் குறைப்பு பற்றிய கணக்கீட்டு கொள்கை அறிமுகப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

**2.2.2 <u>கணக்கீட்டு நியமங்கள்</u>**

இலங்கை அரச சேவை கணக்கீட்டு நியமம் இல.03 இன் பிரகாரம் முந்திய வருடங்களுக்கு ஏற்புடைய பிழைகளை சரிசெய்தல் கடந்தகாலத்துக்கு ஏற்றவாறு செம்மையாக்கி முந்திய வருடத்தின் நிதி நிலமையை மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் ரூ.9,520,133 மற்றும் ரூ.3,938,310 பற்று மற்றும் வரவு பதிவுகள் முறையே அரச மானியம் மற்றும் திரண்ட நிதிகளுக்கு செம்மையாக்கப்பட்டிருந்தன.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------------------------------------

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 1999ஆம் வருடத்தில் சபைக்கு உரித்து மாற்றி பெற்றுக்கொண்ட நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள 0.2022 ஹெக்ரயார் காணியின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கில் பதிவதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வு வருடத்தில் சொத்துக்கள் மறுபடி விலைமதித்தல் செய்ததினால் உருவாகிய ரூ.328,671,316 மறுபடி விலைமதித்தல் மிகை மூலதன மாற்றம் பற்றிய கூற்றில் பிரத்தியேகமாக காட்ட வேண்டிய போதிலும் நிதியத்தின் மீதியில் சேர்த்து காட்டப்பட்டிருந்தது.

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சபை பல்வேறு செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதனால் 2011ஆம் ஆண்டிலிருந்து பேணப்பட்டுவரும் ரூ.691,212 ஆன வியாபார கடன்படுநர் மீதியை சபை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வு வருடத்தின் இறுதிவரையில் முடியாமற்போனது.

(ஆ) வரிசை அமைச்சிலிருந்து அறவிட வேண்டிய 05 வருடங்களுக்கு மேல் பழமையான ரூ.34,233 மீதியை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை.

(இ) அரிசி செயற்றிட்டத்தின் கீழ் 2013ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் வெளி நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்த அரிசி மா இருப்பு பொருட்டு அறவிட

வேண்டியிருந்த ரூ.80,328 தொகை 2015 ஆகஸ்ட் 20ம் திகதி வரையில் அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

---

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காத பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி | . |
| நி.ஒ.110 | சேதம் மற்றும் நட்டம் பற்றிய ஏடு நாளதுவரைப்படுத்தி பேணப்பட்டிருக்கவில்லை |
| நி.ஒ.756 | 2014 திசம்பர் 31 வரை சபைக்கு சொந்தமாக 15 வாகனங்கள் இருந்த போதிலும் நிதிப் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வாகனங்கள் தொடர்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| நி.ஒ.772 | மீளாய்வாண்டில் இடம்பெற்றிருந்த ரூ.59,612 இருப்பு சேதம் தொடர்பில் நிதிப் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 1978 திசம்பர் 19 ஆம் திகதிய 842ம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பந்தி 02இன் (ஈ) மற்றும் (உ)பந்திகள் | நிலையான சொத்து பொருட்டு பிரதான பேரேட்டில் கட்டுப்பாட்டுக் கணக்கு ஒன்றை பேணி பேரேட்டுக் கணக்கை அதன் கட்டுப்பாட்டுக் கணக்குடன் ஒப்பீடு செய்திருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய IAI/2002/02 இலக்கமுடைய திறைசேரி சுற்றறிக்கை | கணினி மற்றும் மென்பொருள் தொடர்பில் நிலையான சொத்து ஏடு பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் நிதிசார் பெறுபேறு ரூபா 1,921,514 மிகையைக் காட்டியதுடன், இதற்கொப்பான முன்னைய ஆண்டின் குறைவு ரூபா 5,077,456 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் பெறுபேற்றில் ரூ.6,998,970 வளர்ச்சி காட்டப்பட்டுள்ளதுடன், ஆளுக்குரிய வேதனாதிகள் மற்றும் ஏனைய செலவுகள் ரூபா 10,152,795 ஆல் அதிகரித்த போதிலும் அரச மானியங்கள் மற்றும் பிற வருமானங்கள் ரூ.17,108,316ஆல் அதிகரித்தமையும் பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் சுய நிதியீட்டத்தின்மூலம் செயற்படுத்தப்படுகின்ற 06 செயற்றிட்டங்களிலிருந்து ரூ.14,553,313 தேறிய இலாபமும், ஒரு செயற்றிட்டத்திலிருந்து ரூ.1,503,014 தேறிய நட்டமும் பெறப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஏப்றல் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹெல்தி புட் உணவகத்திலிருந்து 2014 திசெம்பர் வரையிலான காலப்பகுதியினுள் ரூ.1,503,014 தேறிய நட்டமும் பெறப்பட்டிருந்ததுடன் மொத்தச் செலவில் 73 சதவீதம் சம்பளம் மற்றும் கூலிச் செலவுகளாக இருந்தமை இந்த தேறிய நட்டத்துக்கு காரணமாகும்.

### 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) விவசாயிகள் பொறுப்பு நிதியத்திலிருந்து 2010 முதல் 2012ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியினுள் 3 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூ.3,500,000 கடன்தொகை 2013ஆம் ஆண்டில் செலுத்தி முடித்திருக்க வேண்டியபோதிலும்

மீளாய்வாண்டு இறுதி வரையில் குறித்த கடன்தொகையில் ரூ.625,000 மாத்திரம் திருப்பிசெலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2000 முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கு ஏற்புடைய ரூ.751,514 கணக்காய்வுக் கட்டணம் 2015 ஆகஸ்ட் 15ஆம் திகதி வரையில் கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை தேசிய பட்டினி ஒழிப்பு இயக்கச் சபைச் சட்டத்துக்கு இணங்க அரசின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு இசைவாக சமூக பொருளாதார விருத்தி பொருட்டு உள்நாட்டு வெளிநாட்டு முகவராண்மைகளிடமிருந்து நன்கொடை பெறுவதற்கும், சருவதேச பட்டினி ஒழிப்பு இயக்கங்கள் மற்றும் ஏனைய அதற்குச் சமமான வெளிநாட்டு நிறுவனங்கள், சங்கங்கள் அல்லது சமூகங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு சபை தவறியுள்ளது.

**4.3 பதவியினர் நிருவாகம்**

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2014 நவம்பர் 27ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் ஆட்சேர்ப்புத் திட்டத்திலுள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள பொருத்தமான ஊழியர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு தலைவருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த போதிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு முரணாக இரு முகாமை உதவியாளர்கள் முன்னாள் தலைவரால் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) 2014 நவம்பர் 12ஆம் திகதிய 25/2014 இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் தற்காலிக, அமய(நாளாந்த), பதிலீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த பதவியில் தொடர்ந்து 180 நாட்கள் திருப்திகர சேவைக்காலத்தை பூர்த்திசெய்துள்ள ஊழியர்களுக்கு மாத்திரம் நிரந்தர நியமனம் வழங்க வேண்டிய போதிலும், தொடர்ந்து 180 நாட்கள் திருப்திகர சேவைக்காலத்தை பூர்த்திசெய்திராத ஒப்பந்த நியமனதாரிகள் 07 பேருக்கு 2014 நவம்பர் 18ஆம் திகதி நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 28 ஆன போதிலும் மேற்படி சுற்றறிக்கையின் பிரகாரம் 50 ஊழியர்கள் நிரந்தரமாக்கப்பட்டமையினால் உண்மையான பதவியணி 50 ஆல் அதிகரித்துள்ளது.

## 5 கணக்கு நடவடிக்கைதன்மையும் நல்லாட்சியும்

### 5.1 செயல் திட்டம்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) செயல் திட்டத்தின்படி அம்பலாந்தோட்டை பண்ணையில் உள்ள கட்டட திருத்தம், விவசாயக் கிணறு அமைத்தல் மற்றும் 08 ஏக்கரில் பாசிப்பயறு செய்கை பண்ணும் பொருட்டு மீளாய்வாண்டில் ரூ.2.46 மில்லியன் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும் குறித்த பணிகள் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) தணமல்வில பண்ணையில் ரூ.600,000 செலவு செய்து நீர்ப்பாசன நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ரூ.1,454,000 செலவு செய்து யானைக்கான வேலியொன்று அமைப்பதற்கும் மீளாய்வாண்டில் திட்டமிடப்பட்டிருந்தபோதிலும் அவை மேற்கொள்ளப்படவில்லை.

### 5.2 வரவுசெலவுத்திட்ட கட்டுப்பாடு

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) வரவுசெலவுத்திட்ட செலவினமும் உண்மையான செலவினமும் பரிசீலிக்கப்படுகையில் செலவு 2.3 சதவீதத்திலிருந்து 232 சதவீதம் வரையிலான அளவில் வித்தியாசம் இருந்தமையினால் வரவுசெலவுத்திட்ட ஆவணம் பயன்மிக்க நிதிக்கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரவுசெலவுத்திட்ட ஆவணம், செயல் திட்டம் மற்றும் உண்மையான செயலாற்றுகையுடன் காலத்துக்கேற்ப மீயாய்வுசெய்து வித்தியாசம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு செயலாற்றி இருக்கவில்லை.

### 5.3 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2003ஆம் ஆண்டில் 19 விவசாயிகளுக்கு விவசாய நிலம் பொருட்டு நீர் வழங்கும் யந்திரம் பெறுவதற்காக வழங்கப்பட்ட ரூ.80,610 கடன்தொகையை அறவிட்டுக் கொள்வதற்கு மீளாய்வாண்டில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012ஆம் ஆண்டில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி சபைக்கு சட்டரீதியான உரித்தற்ற காணியில் வேலி மற்றும் படலை அமைப்பதற்காக ரூ.2,548,050 பெறுமதியுடைய ஒப்பந்தமொன்று சட்டரீதியற்ற முறையில் வெளி தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. வேலை முடிந்திருந்தும் சபையானது ஒப்பந்தகாரருக்கு பணம் கொடுக்காமையினால் ரூ.3,209,728 நட்டஈட்டுத் தொகையை செலுத்துமாறு ஒப்பந்தகாரர் சட்ட நிறுவனம் ஒன்றின்மூலம் சபைக்கு எதிராக 2013 திசெம்பர் 31ஆம் திகதி கோரிக்கைப் பத்திரம் அனுப்பப்பட்டிருந்ததுடன் அதற்குரிய வழக்கு விசாரணை 2015 ஆகஸ்ட் 28ஆம் திகதி வரையில் முடிவுறாதிருந்தது.

(இ) முன்னாள் உபதலைவர் 2011ஆம் ஆண்டில் கடன் அடிப்படையில் ரூ.64,500 பெறுமதியுடைய சுவபோஷ மற்றும் மவ்போஷ பெக்கற்றுக்கள் பெற்றுக் கொண்டிருந்தபோதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் குறித்த பணத்தை அவரிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 09 அலுவலர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூ.42,080 பலவித கடன் மற்றும் முற்பண மீதிகள் 10 வருடங்களாக நிலுவையாக இருந்தபோதிலும் குறித்த பணத்தை அறவிட்டுக்கொள்வதற்கு சபை தவறியுள்ளது.

(உ) 2011ஆம் ஆண்டிலிருந்து நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு செலுத்த வேண்டிய ரூ.3,300,000 கொடுத்து தீர்ப்பதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2012 ஒற்றோபர் 01ஆம் திகதி நடைபெற்ற பொது தொழில்முயற்சிகள் பற்றிய செயற்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு சபையின் திருத்தப்பட்டவாறான சட்டமூலம் 2015 ஆகஸ்ட் 28ஆம் திகதி வரையில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2012ஆம் ஆண்டில் நாரஹேன்பிட்டி விற்பனைக்கூடத்தில் இடம்பெற்ற ரூ.77,352 பண திருட்டு தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 104(4)இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த விற்பனைக்கூடத்தில் காசாளர்களாக சேவையாற்றிய காரியாலய காரிய சகாயர் மூவரும் குறித்த பதவியில் செயலாற்றும் முகமாக எழுத்துமூலம் ஒப்படைப்பதற்கும் அவர்களிடமிருந்து பிணைப்பொறுப்பு பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்துக்குக் காலம் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | கட்டுப்பாடுத்துறை | அவதானிப்புக்கள் சுருக்கமாக |
|---|---|---|
| (அ) | நிதிக் கட்டுப்பாடு | வரவுசெலவுத்திட்ட செலவினத்துக்கும் உண்மையான செலவினத்துக்கும் இடையில் பெரும் வித்தியாசம் கண்டுபிடிக்கப்பட்டமை மற்றும் கடன் கொடுத்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) | பதவியினர் நிருவாகம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக பதவியினர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர். |
| (இ) | செயற்றிட்ட முகாமைத்துவம் | திட்டமிடப்பட்டவாறு செயற்றிட்டங்களை செயற்படுத்தாமை மற்றும் செயற்றிட்டங்கள் நட்டமடைதல். |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | சபைக்குச் சொந்தமான காணிகளை மதிப்பிட்டு பதிவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (உ) | ஒப்பந்த நிருவாகம் | சபைக்குச் சொந்தமில்லாத காணிகளில் நிருமாணம் பொருட்டு ஒப்பந்தம் வழங்கியமை. |

ஒப்பம் /டப்.பீ.சீ.விக்கிரமரத்ன

கணக்காய்வாளர் தலைமையதிபதி (பதில்)